Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

லர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 10 ஆம் நாள் ஷவ்வால் 26 (23-3-63) சனிக்கிழமை இதழ் 43

# 42 மணி நேரத்தில் நீந்திக் கடந்தார்

## ஏகாம்பரத்துக்கு மயானத்தில் அஞ்சலி

### எம். பி., நகரசபைத் தலைவர் மற்றும்பலர் கலந்துகொண்டனர்

திருக்கோணமலை, வெள்ளி காலஞ் சென்ற மூதூர் முதலாவது எம். பி. திரு. த. ஏகாம்பரம் இவ்வுலகைவிட்டுப் பிரிந்த இரண்டாவது ஆண்டு நினைவு தினம் இன்று கொண்டாடப்பட்டது.

திருக்கோணமலை இந்து மயானத்தில் திரு. ஏகாம்பரத்தின் பூதவுடல் தகனம்செய்யப்பட்ட இடத்திலுள்ள ஸ்தூபியின் அடியில் திருக்கோணமலை நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தம், திருக்கோணமலை எம். பி. திரு. என். ஆர். ராஜவரோதயம், மூடிக்குரிய வழக்கறிஞர் காப்டன் கனகசிங்கம், நகரசபையின் ஐந்தாம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். எச். சோமபாலா, மூன்றும் வட்டார அங்கத்தவர் ஜனப் காதர் ஆகியோரும் திருமதி மங்கையர்க்கரசி ஏகாம்பரம் அவரின் புதல்வி ஆகியோரும் மற்றும் பலரும் இன்று காலையில் கூடி மறைந்த திரு. ஏகாம்பரத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

குத்துவிளக்கேற்றி மலர்களையும் மலர் மாலைகளையும்வைத்து அவர்கள் அஞ்சலி செய்தனர்.

நகரசபைத் தலைவர் டாக்டர் சிவானந்தம் பேசுகையில் திருக்கோணமலையின் தவப்புதல்வர் திரு. ஏகாம்பரம் மறைந்துவிட்டாலும் அவரது நினைவு என்றும் மக்கள் மனதிலிருந்து மறையாது எனக் கூறினர்.

திருமலை எம். பி. திரு. என். ஆர். ராஜவரோதயம் பேசுகையில் தமிழ் மொழிக்காகவும் தமிழ்ப் பேசும்மக்களின் உரிமைக்காகவும் தமது உயிரையே அர்ப்பணித்தவர் திரு. ஏகாம்பரம் என்று கூறினர்.

காப்டன் கனகசிங்கம் பேசுகையில் சாதிமதபேதமின்றிச் சேவை செய்தவர் திரு. ஏகாம்டரம் என்று கூறினர்.

இன்று மாலையில் நினைவுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

## அலைபாயும் கடலில் ஆனந்தனின் வெற்றி

### வீர வரவேற்பு அளிக்க வல்வெட்டித்துறை தயாராகிறது

வல்வெட்டித்துறை, வெள்ளி

**கொந்தளிக்கும் அலைகளையும், கடும் சுழிகளையும் எதிர்த்து எடுத்தகாரியத்தைச் செய்துமுடிக்காமல் திரும்புவதில்லையென்ற உறுதியுடன் 19 வயது இளைஞனும், சட்டக்கல்லூரி மாணவனுமான ஆனந்தன் 42 மணிநேரம் சமுத்திரத்தில் சஞ்சரித்து இன்று முற்பகல் 10-40 க்கு கோடிக்கரையைப் போய் அடைந்தார்.**

**புதன்கிழமை பிற்பகல் 4-15 மணிக்கு வல்வெட்டித்துறை சுங்க இலாகாக் காரியாலயத்துக்கு அருகில் கடலில் இறங்கி நீந்துவதற்கு ஆரம்பித்த ஆனந்தன் சரியாக இன்று மு. ப. 10-40 மணிக்கு கோடிக்கரையில் ஏறினர். ஆனந்தனும் அவருடன் சென்றவர்களும் நாளை சனிக்கிழமை வல்வெட்டித்துறைக்கு வந்து சேரும்பொழுது அவருக்கு வீரவரவேற்பு அளிப்பதற்கு இப்பொழுதே அமோக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.**

#### காணவில்லையென பரபரப்பு

கோடிக்கரையை அணுகிக்கொண்டிருந்த ஆனந்தனையும் அவருக்கு உற்சாகமளிக்கவும் உதவிபுரியவும் இருபடகுகளிலும் சென்ற உறவினர், நண்பர்கள், இரண்டு டாக்டர்கள், பருத்தித்துறை காரியாதிகாரி ஆகியோரையும் காணவில்லையென்றும் அதிகாலை மூன்று மணியிலிருந்து பல மணிநேரம் அவர்களைக் கடலில் தேடித்திரிந்த மற்றொரு மோட்டார் படகு 'எண்ணெய்' இல்லாமல் திரும்பிவரமுடியாமலிருப்பதாகவும் அப்பகுதிக்குச் சென்ற மற்றொருபடகு இன்று நண்பகல் அளவில் வல்வெட்டித்துறைக்குத் தகவல் கொண்டுவந்தது.

இத்தகவல் ஆனந்தனின் வெற்றிச் செய்தியை எதிர்பார்த்துக்கொண்டுநின்ற பெருந்தொகையான மக்களுக்கு ஏக்கத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியது. வல்வெட்டித்துறையிலும் அதை அடுத்த பகுதிகளிலும் யாழ்ப்பாணத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

#### எம். பி. சுறுசுறுப்பு

ஆனந்தனையும் இருபடகுகளையும் ஒருகட்டுமரத்தையும் காணவில்லைஎன்ற செய்தி கிடைத்ததும் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வித்தாச்சியுடனும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடனும் அவசர அவசரமாக டெலிபோனில் தொடர்பு கொண்டார். நீச்சல்வீரர் ஆனந்தனையும் இருபடகுகளையும் ஒரு கட்டுமரத்தையும் காணவில்லையென்று தகவல் கிடைத்துள்ளதாகவும் இவர்கள்நீரில் அமிழ்ந்தியிருக்ககூடும் அல்லது இந்திய கடற்படையினர் கைதுசெய்திருக்கக்கூடுமென்று அஞ்சப்படுவதாகவும் இவர்கள்பற்றிய தகவல் அறிவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படியும் அரசாங்க அதிபருக்கு பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் தந்திமூலம் கேட்டுக்கொண்டார்.

#### டயஸுடன் எஸ். ஜே. வி. தொ[illegible]

திரு. துரைரத்தின[illegible]மிருந்து நீச்சல்வீரரைக் காணவில்லையென்ற செய்தி கிடைத்ததும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியு. டயஸுடன் தொடர்புகொண்டார். இதன்பயனாக இலங்கை விமானப்படையைச் சேர்ந்த விமானங்களிரண்டு தேடுதல் நடவடிக்கைக்குப் புறப்பட ஆயத்தமாயின.

ஆனந்தனுடன் சென்ற இரு படகுகளையும், சட்டுமரத்தையும் காணவில்லையென்ற செய்தியைக் கேட்டதும் வல்வெட்டித்துறையில் பலர் கண்ணீர் விட்டு அழுதனர். ஆனந்தனின் நண்பர்களான பல இளைஞர்கள் படகுகளில் சென்றிருந்தனர். அவர்களின் பெற்றோர்கள் பெரும் கவலையடைந்தனர்.

#### தந்தையின் தந்தி

இன்று முற்பகல் 10-40 க்கு கோடிக்கரையை ஆனந்தன் போய்ச் சேர்ந்ததாக ஆனந்தனின் தந்தை விவேகானந்தன் அனுப்பிய தந்தி இன்று பிற்பகல் சுமார் நான்குமணியளவில் இங்கு கிடைத்தது. இச்செய்தி கிடைத்ததும் எல்லோரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தனர்.

இந்திய கடற்படையினரால் நேற்று கைதுசெய்யப்பட்ட 37 பேர்களுள் திரு. விவேகானந்தனும் ஒருவராவர். கைதுசெய்யப்பட்டவர்களை விடுதலை [illegible]று இந்திய அரசாங்[illegible]த் தாம் தெரிவித்துள்[illegible] லங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் இன்று காலையில் தெரிவித்திருந்தார்.

#### இன்று வருவார்

நீச்சல் வீரர் ஆனந்தனும், அவருடன் சென்றவர்களும் (நாளை) சனிக்கிழமை காலையில் வந்து சேருவாரகளென எதிர்பார்க்கப்படுகிறது. அவருக்கு வீரவரவேற்பு அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

---

## கவர்னர்ஜெனரல் விஜயம் பற்றி இன்று ஆலோசனை

### யாழ். பிரதேசகலாமன்றம் மூன்று எம். பி. க்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், சனி கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவாவின் யாழ்ப்பாண விஜயம் சம்பந்தமாக ஆராயும்பொருட்டு யாழ்ப்பாணப் பிரதேச கலாமன்றத்தின் முக்கிய கூட்டம் இன்று நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி கூட்டும் இந்தக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்துக்குத் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்குத் திறப்பு விழா சம்பந்தமாக கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா யாழ்ப்பாணத்துக்கு இம்மாத முடிவில் வரவிருப்பதாக உத்தேசிக்கப்பட்டிருப்பதும், கவர்னர் ஜெனரலின் விஜயத்தை பகிஷ்கரிப்பதென்று தமிழரசுக் கட்சி தீர்மானித்திருப்பதும் கறுப்புக் கொடி பிடிப்பதென்று தமிழரசு வாலிப முன்னணி தீர்மானித்திருப்பதும் வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

பிரதேச கலாமன்றத்தின் இன்றைய கூட்டத்தில் இந்தியாவிலிருந்து இசையாளர்களை அழைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள 'கோட்டா பர்மிட்டுகளை' யாரிடம் வழங்குவதுபற்றியும் ஆலோசனை செய்யப்படுமெனவும் தெரிகிறது.

---

## இன்று

வண்ணை சிவன்கோவில் 4-ம் திருவிழாவான இன்று மாலை 6-00 மணிமுதல் முத்தமிழ்மணி ஸ்ரீ. வி. எஸ். எஸ். மணிபாகவதர் 'குமரகுருபரன்' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி

6%

உறுதியான இடம்

சிலோன் நிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

## அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

### நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 625 — செங்கலடி உப-பிரிவில் சூள்ளாமுனை அணைக்கட்டு கட்டுதல், கேள்விப்பத்திரங்கள் 23-4-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 626 — செங்கலடி உப-பிரிவில் உன்னிச்சை ஸ்பில் திருத்த வேலைக்கான கேள்விடபத்திரங்கள் 23-4-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

என் 644 — வவுனிக்குளம் உப-பிரிவில் (அ) வவுனிக்குளம் — மூன்று முறிப்பு ரோட்டில் புதுப்பிரிவு ரோட்டு அமைத்தல. (ஆ) வவுனிக்குளத் திட்ட இடது கட்டிலுள்ள 3-ம் பிரிவுக் கிளை வாய்க்கால்களும், வயல் வாய்க்கால்களும் கட்டுதல். கேள்விப்பத்திரங்கள் 16-4-63 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இதன் முழு விபரங்களுக்கும் 22-3-63ல் அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 2-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

## வரி விளம்பரம்

### வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு, கோவில் வீதியிலுள்ள எமது வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். தண்ணீர் சேவை முதல் சகல வசதிகளுமுண்டு. றெயில்வே, பஸ்நிலையங்களுக்கு அருகாமையிலுள்ளது.

விபரங்கட்கு: விவேகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ், பெரியகடை, யாழ்ப்பாணம். 791

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கருநாவல்பற்று தெற்கு கிராமச் சபை, ஒலுமடு, மாங்குளம்

கருநாவல்பற்று தெற்கு கிராமச்சபையின் இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்குத் தேவையான, ஆயுள்வேதவைத்திய அதிபர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட, ஆயுள்வேத மருந்துகள் வழங்குவதற்குக் கோரி பதிவுத்தபால் மூலம் 15-4-63 காலை 10 மணி வரை வரும் கேள்விப்பத்திரங்கள் யாவும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. விரும்புவோர் 5-4-63 பிற்பகல் 4 மணிவரை முற்பணமாக ரூபா 10-00 (பத்து) போம் பணம் ரூபா 2-00 (இரண்டு) கட்டிப் போம் எடுத்தல் வேண்டும். (போம் காசு ரூபா 2-00 திருப்பித்தரமாட்டாது) மருந்துகளின் விபரம் இச்சபைக் காரியாலயத்தில் கேட்டறியலாம்.

ஆ. சின்னையா.
வி. ச. அக்கிராசனர்
கருநாவல் பற்று தெற்கு, ஒலுமடு, மாங்குளம்.

19-3-63 796

### அந்தியெட்டி அறிவித்தல்

காலஞ்சென்ற டாக்டர் அப்புக்குட்டி தவரத்தினசிங்கம் அவர்களின் அந்தியெட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (24-3-63) அராலி கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில நடைபெறும். தனிப்பட்ட அழைப்பிதழ் எதுவும் அனுப்ப முடியாததால் நண்பர்களும் உறவினர்களும் இதையே அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

வே. அப்புக்குட்டி 800

## உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டா?

கொழும்பு, வெள்ளி கலகெதராவில்நேற்று இழுக்கப்பட்ட ஆஸ்பத்திரி சுவிப் முடிவுகள் பின்வருமாறு:-

**முதற் பரிசு**
14 K 0324 ரூபா 57,800

**இரண்டாவது பரிசு**
17 R 0336 ரூபா 28,900

**மூன்ருவது பரிசு**
11 K 0197 ரூபா 14,450

தலா ரூபா 578 பரிசு பெற்ற இருபத்தைந்து டிக்கட்டுகள் வருமாறு.-

| | |
|---|---|
| 06 L 0004 | 08 P 0415 |
| 06 B 0728 | 09 R 0013 |
| 14 L 0722 | 05 O 0540 |
| 08 L 0312 | 11 Z 0194 |
| 02 P 0067 | 04 O 0057 |
| 15 G 0793 | 19 Z 0215 |
| 07 J 0198 | 13 W 0868 |
| 01 K 0058 | 06 R 0439 |
| 14 T 0218 | 47 B 0956 |
| 10 R 0299 | 08 K 0574 |
| 01 V 0175 | 05 D 0116 |
| 14 A 0109 | 05 Y 0147 |
| 08 N 0569 | |

—

புதுடில்லி, மார்ச் 22

பூட்டான் மகாராஜாவுக்கு இருதய நோய் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவரின் உடல் நிலை மிகவும் மோசமாகவிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதா கிருஷ்ணன், கவலை தெரிவித்து ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.

### வீடு வாடகைக்கு

வண்ணர்பண்ணை, தட்டா தெருச் சந்திக்கு அண்மையில் ஐயனர்கோயிலடி வீதியில் எல்லா வசதிகளுடனும் உள்ள 28/1 இலக்க வீடு வாடகைக்குக் கொடுக்க இருக்கின்றது. தேவையானோர் கீழ்க்காணும் விலாசத்தில் அறியலாம். இந்துக் கல்லூரிக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில் இவ்வீடு இருப்பது குறிப்பிடத்தக்கது. தா. நவரத்தினம், (இளைப்பாறிய விதானையார்) ஐயனர் கோயிலடி, வண்ணர் பண்ணை. 799

### வைத்தீஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கம்

மேற்படிசங்கத்தின் பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 31ந் திகதி (31-3-63) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் கல்லூரிப் பொன்விழா வைப் பற்றி ஆலோசிக்கப்படும். பழைய மாணவர் அனைவரையும் சமுகந் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நா. இராசநாயகம்,
காரியதரிசி.

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். 22-3-63.
801

### நெசவாளர் தேவை

நல்லூர் முத்திரைச் சந்தைக்கு முன்னுகவுள்ள நெசவுசாலையில் அனுபவம் வாய்ந்த நெசவாளர்களுக்கு இடமுண்டு. தேவையான விபரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

திரு. பி. யேம்ஸ் செல்வம், 'செல்வஸ்', பிடவைக் கடை, 190, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 802

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

# சித்தவைத்தியர்களுக்கு நீதி கிடைக்குமென்று நம்பலாமா?

இலங்கைச் சுதேசவைத்திய துறையில் மூன்று பிரிவுகள் உண்டு சிங்களமக்களால் கையாளப்படுவது ஆயுள்வேத வைத்தியம். தமிழ்மக்கள் வாழ்வோடிணைந்தது சித்த வைத்தியம். முஸ்லிங்கள் கண்டது யூனனி வைத்தியம். இம் மூன்று பிரிவுகளையும் இணைத்து நிற்கும் நிறுவனந்தான் இலங்கை ஆயுள்வேத வைத்தியக் கவுன்சில். இக்கவுன்சிலுக்கு முன்னே கூறிய மூன்று வைத்தியத் துறையைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்க வேண்டியது நியாயமானது. நீதியும் கூட. இதனை எவரும் மறுக்கவும் மாட்டார்கள்.

ஆனால், இப்பொழுது நிறுவப்பட்டிருக்கும் ஆயுள்வேத வைத்தியக் கவுன்சிலுக்கு சித்த வைத்தியப் பிரிவுக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதில் அரசாங்கமும் கனம் சுகாதார மந்திரியாரும் தவறிவிட்டனர். தமிழர்களிடத்தில் இந்த மாற்ருந்தாய் மனப்பான்மை காட்டப்படுவது ஏன் என்று புரியவில்லை! தமிழ்ச் சித்த வைத்தியர்களிலும் குறைந்த தொகையினரான யூனனி வைத்தியர்களுக்கும் அதைக் கையாளும மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்திருக்கிருர்கள்.

வைத்தியக் கவுன்சிலில் அரசாங்கத்தார் தாமாக நியமனம் செய்யும் பெரும் பாலான ஸ்தானங்கள் போக இலங்கையடங்கலுமுள்ள வைத்தியர்களாலே தெரிவு செய்யப்படும் மூன்று ஸ்தானங்கள் இருக்கின்றன. இந்த ஸ்தானங்களுக்குத் தமிழ்ச் சித்த வைத்தியர்கள் போட்டியிட முடியுமா? ஒன்றைத்தானும் சுவீகரித்துக் கொள்ள முடியாதே! ஏன்? ஆயுள்வேத வைத்தியம் செய்யும் சிங்கள வைத்தியர்களின் தொகை சுமார் ஏழாயிரமாகும். தமிழ்ச் சித்த வைத்தியர்களின் தொகை இரண்டாயிரத்து ஐந்நூறு தான். யூனனி வைத்தியர்களின் தொகை இவைகளிலும் மிகக் குறைவாகும். ஏழாயிரம் சிங்கள ஆயுள்வேத வைத்தியர்களின் வாக்குகளைக் கொண்டு மூன்று ஸ்தானங்களையும் வெகு சுலபமாகச் சிங்கள ஆயுள்வேத வைத்தியர்களே அபகரித்துக்கொள்ள முடியும்.

இவ்வுண்மைகளையெல்லாம் கனம் சுகாதார மந்திரியாரும் அரசியலாரும் அறிவார்கள் எனவே கனம் சுகாதார மந்திரியார் தமது விசேட அதிகாரத்தைக்கொண்டு தமிழ்ச் சித்த வைத்தியப்பகுதிக்குத் தமிழ்ச் சித்தவைத்தியர்களை அங்கத்தவர்களாக நியமிக்கக்கூடாதா? எடுத்ததற்கெல்லாம் விகிதாசாரப்படி செய்வோமென்று கூச்சல் போடுகிறவர்கள் தமிழ்ச் சித்தவைத்தியர்களின் தொகைக்கேற்பவாவது ஆயுள்வேத வைத்தியக் கவுன்சிலில் பிரதிநிதித்துவம் வழங்கினல் குடி முழுகிப்போய்விடுமா?

சித்தவைத்தியர்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல், அவர்களுடைய குரல் தொனிக்காமல சித்தவைத்தியத்தில் அறிவும் ஆற்றலும் அற்றவர்களால் உண்டாக்கப்படும் பிரமாணங்கள் என்ன பயனைத் தரும்! அவை தமிழ் சித்தவைத்தியர் மத்தியில் செல்லுபடியாகாதென்றே எண்ணுகிறேன்.

முன் பல தடவைகளில் ஆயுள்வேத வைத்தியக் கொமிஷன் செய்த சிபார்சுகளை அரசாங்கம் நிராகரித்ததையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. சித்த வைத்தியர்களுக்கு நீதி கிடைக்குமென்று இனியும் நம்பலாமா? காலந்தான் பதில் செல்ல வேண்டும்.

அ. க. குமாரசாமி,
தலைவர்,
அகில இலங்கைச்
சித்த ஆயுள்வேத
வைத்திய சங்க.

●

## ஏகாதிபத்தியம்!

பிரிட்டிஷ்காரர் நம் நாட்டைக் கைப்பற்றி, ஆட்சியைக் கையேற்றபொழுது, அனுபவமுள்ள நிர்வாகிகளையும், சிவில் சேவையில் சித்தியெய்திய விசேஷ உத்தியோகஸ்தர்களையும் இங்கிலாந்திலிருந்து கொண்டுவர வேண்டியிருந்தது. இந்த உத்தியோகஸ்தர்களுக்கு நாட்டின் தேசிய பாஷைகள் எதுவும் தெரியாது. ஆயினும் சிங்களத்திலும் தமிழிலும் பேசக்கூடிய தகுதியுள்ளவர்களாக அவர்கள் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த உயர்தர உத்தியோகஸ்தர்களுக்கு பொதுமக்களுடன் அவ்வளவு புழக்கம் இருக்க வேண்டிய அவசியமுமேற்படவில்லை. ஆகையால் பொலிஸ் கான்ஸ்டபிள்கள், பொலிஸ் விதானைமார் போன்ற சிறு உத்தியோகஸ்தர்கள் ஆங்கிலப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படவில்லை. இந்த உத்தியோகஸ்தர்கள் மக்களின் மொழிகளிலேயே தங்கள் கடமைகளை ஆற்றிவந்தார்கள். தமிழ், சிங்கள ஆசிரியர்களும் ஆங்கிலம் படிக்க வேண்டும் என பிரிட்டிஷ்காரர் எதிர்பார்க்கவில்லை.

ஒருநாட்டில் மக்கள் தாங்களே அரசாளக்கூடியதாகவும் அவர்களுடைய மொழிகள் அபிவிருத்தியடையக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இதற்காகவே இலங்கையின் சுதந்திரத்தைப் பெறுவதற்கு சிங்களவருடன் தமிழரும் முன்னின்று உழைத்தனர். மொழிப் பிரச்னையையே தமது கட்சிக்குப் பிரபல்யம் தேடிக்கொடுக்கும் ஒரு திட்டமாக சமஷ்டிக் கட்சியினர் நம்பியிருக்கிருர்கள் என்பது உண்மைதான். ஒருவர் தன்னுடைய மொழியில் பேசுவதும சொந்த மொழியில் எழுதுவதும் தாய் மொழியில் அரசாள்வதும் மக்கள் சுதந்திரத்தின் அடிப்படைகளாகும்.

இப்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கைப்படி நாட்டின் ஒரு முக்கிய சமூகத்தினதும் புத்திக் கூர்மை கொண்ட சமூகத்தினதும் மொழியாகியதமிழை பொலிஸ்காரர்களும், பியூன்களும் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. இக் கொள்கையை முதல் நடத்துவதில் ஒருசிறு சம்பள உயர்வுக்காக பெரும்பாலான தமிழ் உத்தியோகஸ்தர்கள் சிங்களத்தில் தேர்ச்சியடைய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதனல் அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கு சிங்களவர்களோடு தோளோடு தோள் நின்றுழைத்த தமிழர் தமது சுதந்திரத்தைக் கைவிட நேரிடுகின்றது. இதுபோன்றே சிங்களச் சமூகத்தைத் தவிர்ந்த நாட்டின் மற்றைய சமூகத்தினரின் சுதந்திரத்தைப் பறிப்பது போல அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்று எல்லாப் பரீட்சைகளையும் சிங்களத்தில் நடத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றது. இப்படியே தொடர்ந்து நடைபெறுமானல் ஒரு புதுவிதமான சிங்கள ஏகாதிபத்தியம் பூரணமாவதற்கு அதிக நாட்கள் செல்லாது.

எஸ். ஜே. குணசேகரம்
கோப்பாய்.

## அதிசய கல்யாணம்

சிங்கப்பூர், மார்ச் 22

பிறவியிலேயே செவிடாகவும் ஊமையாகவும் பிறந்த 3 சகோதரிகள் தங்களுக்கேற்ற மணளர்களைத் தேர்ந்தெடுத்தனர். அந்த மூன்று மாப்பிளைமார்களும் ஊமையர்கள். அதனுடன் செவிடர்கள். அவர்களும் சகோதரர்களே.

இதில் மற்றொரு வேடிக்கை என்னவென்ருல இந்த 6 பேரும் தையல் தொழில் நடத்தி வருபவர்கள்.

கல்யாணத் தரகர் ஒருவர் இவர்களுக்குச் சரியாகப் பொருத்தம் பார்த்து ஜோடி சேர்த்துள்ளார். இந்த மூன்று ஜோடிகளும் கல்யாண நிச்சய கார்த்தமாக மோதிரம் மாற்றிக்கொண்டுவிட்டனர். கல்யாணத் திகதி இன்னும் குறிப்பிடப்படவில்லை.

—

## சீன கணவனுடன் செல்ல மனைவி மறுப்பு

புதுடில்லி, மார்ச் 22

இந்தியாவில் காவலில் வைக்கப்பட்டுள்ள சீனரின் மனைவிமார் (இவர்களில் பெரும்பாலோர் இந்தியர்) தமது கணவன்மாருடன் சீனவுக்குச் செல்ல மறுத்துவிட்டார்கள் என்று யூனியன் உள்துறை மந்திரி திரு. ஹஜர்னவிஸ் லோகசபையில் கூறினர்.

அப்பெண்மணிகள் தங்கள் தாய்நாட்டிலேயே தங்க விரும்பினல் அவர்களைச் சீனவுக்குச் செல்லுமாறு அரசாங்கம் வற்புறுத்தாது என்றும் அவர் சொன்னர்.

காவலில் வைக்கப்பட்ட சீனரின் இந்திய மனைவிகள் கொடுமைப்படுத்தப் படுகிருர்கள் என்று பீக்கிங் பிரசாரம் செய்வதில ஏதாவது உண்மை இருக்கிறதா? என்று கேட்டதற்குப் பதிலளிக்கையில் இது வெறும் பொய் என்று அவர் கூறினர்.

—

## உத்தரவு நிறைவேற்றவில்லை

கொழும்பு, வெள்ளி

உடனடியாகக் கொல்லப்படவேண்டுமென இரண்டு வாரங்களுக்கு முன்னர் மரண விசாரணை அதிகாரி திரு. இஸ்மெயிலால் கூறப்பட்ட நாய் ஒன்று இன்றும் முகத்துவாரப் பகுதியில் அலைந்து திரிகிறது.

மூன்று மாதத்தின் முன் இந்த நாயால் கடிபட்டு இரு வாரங்களுக்கு முன் ஆஸ்பத்திரியில் மரணமான 11 வயதான ஹில்டன் இல்லாவின் மரணத்தின் போது தான் அந்த நாயைக் கொல்லும்படி திரு. இஸ்மெயில் தெரிவித்தார்.

—

## கல்வி தலைமைக் கந்தோர்

### அம்பாறைக்கு மாற்றம்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பில் அமைந்திருக்கும் கிழக்குப் பிராந்திய கல்விக் தலைமைக்கந்தோரை அம்பாறைக்கு மாற்றுவதற்கானநடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

—

## ஆண்டுவிழா

ஊர்காவற்றுறை, சனி

இலங்கை தமிழரசுக்கட்சி புங்குடுதீவுக் கிளையின் 11-வது ஆண்டுவிழா இன்றுமாலை நடைபெறவிருக்கிறது. புங்குடுதீவு பெருங்காடு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைக்கப்பட்ட முருகமூர்த்தி அரங்கில் விழா நடைபெறும்.

# இந்திய வானொலி நிகழ்ச்சிகள்

## அங்கத்தினர்கள் பாராட்டு

### 'ஆதாரத்துடன் எதிர்ப்பிரசாரம்'

புதுடில்லி, மார்ச் 22

**இந்திய தகவல், ஒலிபரப்புப் பகுதி மக்களிடையே அறியாமையை நீக்கி, ஆர்வத்தைப் பெருக்கி வருகிறதென்று, நேற்று நடைபெற்ற லோக சபையின் கூட்டத்தில் பல அங்கத்தினர்கள் கூறினர்கள். அகில இந்திய வானொலியின் நிகழ்ச்சிகளைப் பலர் பாராட்டிப் பேசினர்கள்.**

தகவல், ஒலிபரப்பு சம்பந்தமான ஒரு மசோதா லோக சபையில் கொண்டுவரப்பட்ட பொழுது, இந்திய தகவல் ஒலிபரப்பு பகுதியின் சேவை குறித்துப் பலர் பாராட்டுத் தெரிவித்தனர். தகவல், ஒலிபரப்பு மந்திரி பேசுகையில், நெருக்கடி காலத்தில், மக்களுக்கு உண்மையான, ஆதாரமுள்ள செய்திகளைக் கொடுப்பதிலும், மக்களிடையே தோன்றியுள்ள அறியாமையை நீக்கி, தேசப்பற்றையும், ஆர்வத்தையும் கொடுப்பதிலும் தகவல், ஒலிபரப்புப் பகுதி தன்னால் முடிந்த சேவையைச் செய்கிறதென்று கூறினர்.

**'ஆதாரத்துடன் எதிர்ப்பிரசாரம்'**

அவசரகால நெருக்கடியின் போது, ஆர்வத்தையும், தேச பக்தியையும் தூண்டும் பல அரிய நிகழ்ச்சிகளை அகில இந்திய வானொலி நடத்துவது குறித்து பல அங்கத்தினர்கள் பாராட்டுத் தெரிவித்தனர். இந்திய-சீன எல்லைத் தகராறு காரணமாக, பீக்கிங் வானொலி செய்யும் பிரசாரத்துக்கு எதிர்ப் பிரசாரங்களை, ஆதாரத்துடன். மக்கள் நன்கு புரிந்துகொள்ளக்கூடிய முறையில் "ஆகாஷவாணி", ஒலிபரப்புகிறதென்றும், சரியான டிரான்ஸ் மீட்டர்கள் இல்லாத காரணத்தினால், தனதுஎதிர்ப் பிரசாரங்களை 'ஆகாஷவாணி' இன்னும் நல்ல முறையில் நடத்த முடியாதிருக்கிறதென்றும் பல அங்கத்தினர்கள் கூறினர்கள்.

**பத்திரிகை சபை**

காங்கிரஸ் அங்கத்தினர் ஒருவர் பேசுகையில், பத்திரிகை சபை விரைவில் நிறுவப்படவேண்டுமென்றும் இது சம்பந்தமான வேலைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

அகில இந்திய வானொலியை ஒரு கார்ப்பரேஷனாக்கவேண்டுமென்று மற்றுமொரு காங்கிரஸ் அங்கத்தினர் கூறினர்.

**பத்திரிகை பொறுப்பு**

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவர் பேசுகையில், நெருக்கடி காலத்தில் சில பத்திரிகைகள் நடந்துகொண்டவிதம் குறித்துக் கண்டித்தார். உண்மையான செய்திகளை, மக்களுக்கு நன்கு புரியும்படி வெளியிடுவதுதான் பத்திரிகைகளின் கடமையென்றும், இப்புனிதமான கடமையினின்றும் பத்திரிகைகள் தவறிவிடக்கூடாதென்றும் அவர் கூறினர்.

**தலையங்க பிரச்னை**

மற்றுமொரு பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அங்கத்தினர் பேசுகையில், நெருக்கடி காலத்தில், பத்திரிகைகள் சரியான, மக்கள் விரும்பக்கூடிய தலையங்கங்களைப் பிரசுரிக்கவேண்டுமென்றும், பத்திரிகைகள் தலையங்கங்களைப் பிரசுரிக்கும் முறையை அரசாங்கம் வகுக்க வேண்டுமென்றும் கூறினர்.

'ஆகாஷவாணியின்' நிகழ்ச்சிகள் யாவும் திறமானவையென்றும், இப்படியே தொடர்ந்து நடைபெறவேண்டுமென்றும், ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் நல்ல முறையில் அமைந்தாலும் திரைப்படங்கள் தங்களது சேவையை நல்ல முறையில் பயன்படுத்தவில்லையென்றும் கூறினர். மற்றுமொரு செய்தி ஸ்தாபனம்வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டுக்கொண்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஆர். தர்மலிங்கம் பேசுகையில், பாரத நாட்டிலுள்ள சிறு பத்திரிகைகளுக்கும் அரசாங்கம் ஊக்கமளிக்கவேண்டுமென்றும், நெருக்கடி காலத்தில் பத்திரிகைகள் பொதுமக்களுக்கு நல்ல சேவையாற்றுகின்றன என்றும் கூறினர்.

**வேறு மொழிகளில் கூடிய நிகழ்ச்சி**

சுயேச்சை அங்கத்தினர் திரு. சாஸ்திரி பேசுகையில், அகில இந்திய வானொலி நல்ல சேவை செய்கிறதென்றும், அண்டை நாட்டு மொழிகள், அகில இந்திய வானொலியில் இடம்பெறுவதுடன், அந்த நிகழ்ச்சிகளுக்கு அதிகமான நேரம் கொடுக்கப்படவேண்டும் என்றும் கூறினர். பாரத நாட்டின் கருத்துக்களை மற்றைய நாட்டு மக்கள் நன்ருக, தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு இது வாய்ப்பளிக்கும் என்றும் அவர் கூறினர்.

---

## புற்றுநோய்க்கு சுண்டெலிப்பால்!

### $\frac{1}{4}$ கலன் பாலின் விலை ரூபா 50,000!

நியூயோர்க், மார்ச் 22

புற்றுநோய் ஆராய்ச்சிக்கு, சுண்டெலியின் பால் பயன்படுத்தப்படுகிறது என்று கூறினல் நீங்கள் நிச்சயம் ஆச்சரியப்படுவீர்கள்! ஆனல் சுண்டெலிப் பால் கால் கலன் சமார் ஐம்பதினயிரம் ரூபாய் என்று கூறினல்...? கொலம்பியா பல்கலைக் கழகத்தினர் சுண்டெலிப் பாலைக்கொண்டு, புற்று நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். சுண்டெலிப் பால் கால் கலன் ரூ 50,000 ஆகிறது! மிக நுண்ணிய அளவில் செய்யப்பட்ட கருவிகளைக் கொண்டு 20,000 சுண்டெலிகளிடம் பால் கறந்தனர்!

---

## மதுரை மீனட்சி சுந்தரேஸ்வரர்

மதுரை, மார்ச் 21

சமீபத்தில் நடைபெறவிருக்கும் மதுரை மீனட்சி சுந்தரேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இணங்கியிருக்கிருர். ஜதத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளும் வைபவத்தில் கலந்து கொள்வார்கள். இத்திருப்பணிக்கு ரூ.20 லட்சம் செலவாகும்

---

# 'நெருக்கடி நேரத்திலும் உணவுநிலைமைதிருப்தி'

## லோகசபையில் விவசாய மந்திரி

புதுடில்லி, மார்ச் 22

நெருக்கடி காலத்திலும் உணவு நிலைமை திருத்திகரமாக விருக்கிறதென்றும், பாரதம் தனக்குத் தேவையான அரிசியைத் தனே உற்பத்தி செய்துவிடுகிறதென்றும் உணவு விவசாய மந்திரி திரு. பட்டீல் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற லோக சபைக் கூட்டத்தில் திரு. பட்டீல் பேசுகையில், உணவுப் பொருள்களின் விலைகளை நிர்ணயிப்பதில் தமது இலாகா ஈடுபட்டிருக்கிறதென்றும் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு அதிக விவசாய நிலம் வேண்டும் என்றும் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நெருக்கடி நேரத்தின் போதும் உணவு நிலைமை திருப்திகரமாக விருக்கிறதென்றும், உற்பத்தித்துறையில் மக்கள் காட்டும் ஆர்வம்தான் இதற்குக் காரணமென்றும் கூறினர்.

அவசரகாலத்தின் போதும், உணவுப் பொருள்களின் விலை உயரவில்லை. மக்களுக்கு சரியான விலையில்தான் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தானியங்களை இறக்குமதி செய்வதை கைவிடும்படி பலர் கேட்கிருர்கள். தானிய இறக்குமதி கையிருப்பில் இல்லாவிடில் விலைகள்யாவும் இப்பொழுது, எதிர்பார்த்ததைவிட உயர்ந்திருக்கும் இதனல் பொதுமக்கள்தான் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்றும் மந்திரி திரு. பட்டீல் கூறினர்.

---

லண்டன், மார்ச் 21

பெர்லின் சம்பந்தமாக, அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே விரைவில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## சீன நல்லெண்ண தூதுகோஷ்டி பிரிட்டன் செல்கிறது

பீக்கிங், மார்ச் 21

சீன தேசத்தின் நல்லெண்ண தூதுகோஷ்டியொன்று, சீன வெளிநாட்டு வர்த்தக உதவி அமைச்சர் தலைமையில், பிரிட்டன் செல்கிறது. இந்தத் தூதுகோஷ்டி பிரிட்டனின் அழைப்பின்மீது அங்குசெல்கிறது.

இத்தூதுக் குழுவினர் பிரிட்டனில் தங்கியிருக்கும் காலத்தில், பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் சீன-பிரிட்டிஷ் வர்த்தக பேச்சுவார்த்தைகளை நடத்துவார்களென்றும் இப்பேச்சுவார்த்தைகள் உத்தியோக முறையில் நடக்காதென்றும் தெரியவருகிறது.

சீன நல்லெண்ணத் தூது கோஷ்டியினர், பிரிட்டனில் ஏப்ரல் மாதம் 11-ம் திகதி வரை தங்கியிருப்பார்கள்.

---

## காலினல் எழுதும் பையன்!

லண்டன், மார்ச் 22

கைகளிரண்டும் இல்லாத 18 வயதுப் பையன் பிராங் லெட்ஜ்பர் மிங்காம் பல்கலைக் கழகத்தில் படிப்பதற்கு மனுச் செய்துள்ளார். இதுவரையில் அவருக்குப் பாடசாலையில் இடம் கிடைத்தது போலவே கல்லூரியிலும் இடம் கிடைக்குமென்றும் பல்கலைக் கழகம் அறிவித்திருக்கிறது.

கைகளற்ற பையன் கால்களால் அருமையாய் எழுதக் கற்ருன். பாடசாலையில் அவன் எல்லாப்பாடங்களிலும் தேறியுள்ளான்.

---

# மரத்தில்ஏறியகவர்னர்!

நைரோபி, மார்ச் 22

கினியாவின் கவர்னர் சர் மால்கம் மாக்டொனல்ட் ஒரு யானையின் சீற்றத்திலிருந்து தப்புவதற்காக ஒரு மரத்தின் மீது ஏறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உத்தியோகபூர்வமான தஸ்தாவேஜுகள் அடங்கிய கைப்பெட்டியையும்பற்றிக்கொண்டு அவர் மரத்தில் ஏறவேண்டியதாயிற்று.

கவர்னர் இரு வேடுவருடன் காட்டுக்குச் சென்ருர். மிருகங்களை வேட்டையாடுவதற்காக மரத்தின்மீது கட்டப்பட்டிருந்த ஒரு குடிசையைப் பார்க்கும் பொருட்டே அவர் காட்டிற்குச் சென்ருர்.

கவர்னரும் அவருடைய கோஷ்டியினரும் மரத்து வீட்டின் அடிவாரத்துக்குச் சென்றதும் வெகுஅருகில் ஒரு யானைக் கூட்டத்தைக் கண்டனர். இக் கூட்டத்திலுள்ள ஒரு யானை கவர்னரின் கோஷ்டியைத் தாக்க ஆரம்பித்தது. உடனடியான தாக்குதல் அபாயம் கவர்னர் சர் மால்கம் மாக்டொனல்டுக்கே ஏற்பட்டது. அவர் கைப்பெட்டியைப் பற்றிக்கொண்டு மரத்தில் ஏறிவிட்டார். மற்றவர்களும் அவரைப் பின்பற்றி மரத்தில் ஏறி உயிர் தப்பினர்.

---

# கூட்டத்திலிருந்து நிருபர்கள் வெளிநடப்பு

கோவை, மார்ச் 22

கோவை நகர சபைக் கூட்டம் நடைபெற்றபோது பத்திரிகை நிருபர்களைப் பற்றி தலைவர் அவமதிப்பாக சில வார்த்தைகள் கூறினர். இதனை ஆட்சேபித்து நகரைச் சேர்ந்த எல்லாப் பத்திரிகை நிருபர்களும் கூட்டத்தைவிட்டு வெளியேறினர்.

தங்கள்வார்டுகளில் போதிய அளவு தண்ணீர் சப்ளைகிடைக்கவில்லை என்று புகார் தெரிவிப்பதற்காக கூட்டம் நடைபெற்ற இடத்துக்குள் வரிகொடுப்பவர்கள் வந்தனர். அங்கு என்ன நடைபெறுகிறது என்பதனை கவனிப்பதற்காக சில பத்திரிகை நிருபர்கள் தங்கள் இடத்திலிருந்து எழுந்து சென்றனர்.

நிருபர்கள் ஒழுங்காக நடந்துகொள்ளவேண்டும் என்றும் இதுபற்றித் தாம் பலமாக எச்சரிப்பதாகவும் நிருபர்கள் தங்கள் இடங்களிலிருந்து எழுந்து சென்றிருக்கக்கூடாது என்றும் நகரசபைத் தலைவர் பொறுப்பை வகிக்கும் திரு. ஆறுமுகம் நிருபர்களை நோக்கிக் கூறினர்.

உடனே கூட்டத்திலிருந்து நிருபர்கள் தங்கள் இடத்திலிருந்து எழுந்து வெளியே சென்றுவிட்டனர்.

இதையடுத்து கவுன்சில் கூட்டம் ஒரு மெம்பரின் யோசனைக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டது.

உடனே சில கவுன்சிலர்கள் நிருபர்களை தலைவர் அறைக்குள் அழைத்துச் சென்று சமரசம் செய்துவைக்க முயன்றனர் ஆனல் திரு. ஆறுமுகம் ஒரே பிடிவாதமாக தமது வார்த்தைகளை வாபஸ்பெற மறுத்துவிட்டார்.

கூட்டம் பிறகு தொடர்ந்து நடைபெற்றது. ஆனல் நிருபர்கள் யாரும் கூட்டத்தில் இல்லை.

நகரசபைத் தலைவர் கூறிய வார்த்தைகளை அட்சேபித்து கோவை பத்திரிகை நிருபர்கள் சங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. கூட்டத்திலிருந்து எழுந்துசென்று வெளியே என்ன நடக்கிறது என்பதனைப் பார்க்க நிருபர்களுக்கு உரிமை உண்டென்றும் நிருபர்களுக்கெதிராக தாம் கூறிய வார்த்தைகளை நகரசபைத் தலைவர் வாபஸ் பெறும்வரை கவுன்சில் கூட்டத்தை பகிஷ்கரிப்பதென்றும் சங்கம் தீர்மானித்தது.

நகரசபை கவுன்சில் கூட்டம் நடைபெறுகையில் தலையில் தண்பானை சுமந்து வந்த பெண்கள் உட்பட 5பேர் தமது வார்டில் தண்ணீர் சப்ளை பற்ருக்குறை குறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நகர சபைத் தலைவர் திரு. ஆறுமுகம் அப்போது என்ன நடக்கிறது என்பதனைக் கவனிக்கும் பொருட்டு கூட்டத்தை விட்டு விட்டு வெளியே சென்ருர். கூட்டம் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

---

மதுரையில்

## பொலிஸ்துப்பாக்கி பிரயோக சம்பவம்

சென்னை, மார்ச் 21

மதுரைஜில்லாவிலுள்ள திருமங்கலத்துக்கருகே ஒரு கிராமத்தில் நடைபெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம்பற்றி விசாரணைக் கமிஷன் எதுவும் நடத்துவதற்கான அவசியம் இல்லைஎன உள்நாட்டு மந்திரி திரு. பக்தவத்சலம் அறிவித்தார். தி. மு. க., "பார்வர்ட் பிளாக்" கட்சிகளின் அங்கத்தினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் 1500 பேர் வேல் கம்புகள், அரிவாள்கள் ஆகியவற்றுடன் தாக்கினர்கள் என்றும், பொலிசார் 12 ரவுண்டுகளே சுட்டனர் என்றும், இதனல் 3 பேர் பலியானர்கள் என்றும், ஒரு பெண் உட்பட 9 பேர் காயமடைந்தனர் என்றும் மந்திரி இதுபற்றித் தகவல் தெரிவித்தார்.

---

## அமெரிக்க எஞ்ஜினியரின் புரட்சித் திட்டம்

லண்டன், மார்ச் 22

ஒரு கோஷ்டி மனிதரைத் தண்ணீருக்குள் மூழ்கச்சொல்லி அங்கு அவர்களைப் பலதினங்கள் உயிருக்கு அபாயமின்றித் தங்கியிருக்கச் செய்ய எட்வின் லிங்க் என்னும் அமெரிக்க எஞ்ஜினியர் திட்டமிட்டுள்ளார்.

கடலுக்கு அடியில் நூற்றுக்கணக்கான அடி பாதாளத்தில் இந்த அதிசயத்தை நடத்தப் போவதாக திரு. லிங்க் கூறினர்.

இந்தத் திட்டத்தைப் பரீட்சைசெய்து பார்ப்பதற்காக திரு. லிங்கும் அவருடைய மனைவியும் லண்டனிலிருந்து மொனகோவுக்கு விமானத்தில் செல்கின்றனர். இத்திட்டத்தின் மூலமாகக் கடலில் ஆழம் சம்பந்தமான ஆராய்ச்சியிலும் நீரில் மூழ்கிப் போர் செய்வதிலும் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும்.

நீரில் மூழ்குகிறவர்கள் முதலில் தண்ணீருக்கடியில் 400அடி ஆழத்திற்குச் செல்வர் என்றும் திரு. லிங்க் நிருபர்களிடம் கூறினர். நீரில் மூழ்குகிறவர்கள் காற்றடிக்கக் கூடிய ஜாடிகளில் மிகவும் ஆழத்தில் பல நாட்கள் தங்குவர் என்று திரு. லிங்க் கூறினர்.

---

## இரு விஞ்ஞானிகளுக்கு பட்நகர் பரிசு

புதுடில்லி, மார்ச் 22

இரு விஞ்ஞானிகளுக்கு சாந்த சொரூப் பட்நகர் பரிசுகளை பிரதமர் நேரு வழங்கவிருக்கிருர். கணித ஆராய்ச்சியில் சிறந்த சாதனையை ஈட்டிய பேராசிரியர் கே. சந்திரசேகரன், புள்ளி இயல் துறையில் சர்வாதச புகழ்பெற்ற பேராசிரியர் ராதா கிருஷ்ணராவ் ஆகியோரே அவர்கள்.

## மணி வாக்கு

ஒழுங்குபட்ட சமுதாயத்திலே, ஒருவருக்கு உணவு கிடைப்பது மிக மிக எளிதாக இருக்கவேண்டும். ஒரு தேசம் ஒழுங்காக, சுபிட்சமாக இருப்பதற்கு, அங்கு எவ்வளவு லட்சப்பிரபுக்கள் இருக்கின்றனரென்பதன்றி, மக்கள் பசி பட்டினி இல்லாமல் வாழ முடிவதே அதற்கு அடையாளமாகும்.

—மகாத்மா காந்தி.

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 10 உ (23-3-63)

## சபாஷ் ஆனந்தன்!

தொண்டமானாறைச் சேர்ந்த இளம் வீரர் ஆனந்தன், பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து கோடிக்கரைக்குப் பத்திரமாகப் போய்ச்சேர்ந்துவிட்டதற்காக அவரை ஈழநாட்டு பொதுமக்களின் சார்பாக மனமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

புதன்கிழமை மாலை 4 மணிக்குப் பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆசியுடனே வல்வெட்டித்துறையிலிருந்து புறப்பட்ட அவர், மறுநாள் வியாழக்கிழமை இரவுக்குள் கோடிக்கரையைச் சேர்ந்துவிடுவாரென்று எதிர்பார்க்கப்பட்டது. அவரது மாமனரான நவரத்தினசாமி இதே கடலை ஒன்பதாண்டுகளுக்கு முன்பு 27 மணி நேரத்தில் கடந்தார். சரித்திரத்தில் பதியத்தக்க அந்தச் சாதனையை அவர் செய்துமுடித்தது 1954-ம் வருடம் மார்ச் மாதம் 26-ந் திகதி. பின்னர் வேறுயாரும் ஆபத்துக்கள் நிறைந்த இந்தக் காரியத்தைச் செய்யமுன்வரவில்லை. இப்போது அவரது மருமகனை இளம்வீரர் ஆனந்தன் இந்த வீரச்செயலை சுமார் 42 மணிநேரத்தில் செய்துமுடித்திருக்கிறார். கடல் கொந்தளிப்பும், சில இடங்களில் நீர்வேகமும் அவரைப் பெரும் அல்லாட்டத்துக்கு உள்ளாக்கியது. பெரும் சோதனைகளெல்லாம் ஏற்பட்டும், உறுதியான உள்ளத்துடன், எடுத்தகாரியத்தை வெற்றிகரமாக முடித்ததுபற்றி ஈழநாடே பெருமைப் படுகின்றது. அவருக்கு இங்கு மகத்தான வரவேற்புகள் காத்திருக்கின்றன.

இவ்விஷயமாக இங்கு பொதுமக்கள் காட்டிய ஊக்கமும் உற்சாகமும் கொஞ்சமன்று. நேற்று மத்தியானம் வரை அவரைப்பற்றிய செய்தி எதுவும் கிடைக்காமல் போகவே, அவரைப்பற்றிப் பொதுமக்களுக்கு அதிக கவலை ஏற்பட்டது. நமது காரியாலயத்துக்கு டெலிபோன் செய்திகள் குவிந்தவண்ணமிருந்தன. அவருக்குத் துணையாகச்சென்ற படகிலிருந்தவர்கள், இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டது பெரிதும் வருந்தத்தக்கதாகும். இதற்கான முன்னேற்பாடுகளைத் தக்கபடி செய்திருப்பின், இவ்வித அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுத்திருக்கலாம்.

ஒருமனிதன் நீந்திச்சென்று விடக்கூடியதூரமுள்ள கடல்தான் இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையேயுள்ளது. இந்தவழியில்தான் முன்னர் போக்குவரத்துகள் நடந்துவந்தன. இதுதான் சுலபமும் இயற்கையுமாகும். ஆனால் எக்காரணம் பற்றியோ இதைவிட்டு தலையைச்சுற்றி மூக்கைப்பிடிப்பது போல், தலைமன்னர் வழியை ஏற்படுத்தினர். அதற்கும் பல பல தடைகள்போடுகின்றனர். இயற்கைக்கு மாறான இந்தத்தடைகள் வெகுகாலம் நீடிக்கமுடியாது மீண்டும் பழைய வழி திறக்கப்படத்தான் வேண்டும். வீண் சந்தேகங்களும் பீதிகளும் இதற்குத் தடையாக நிற்கலாம். என்றாலும் காலக்கிரமத்தில் அவை நீக்கப்பட்டுவிடுமென்பதே நமது நம்பிக்கை. இயற்கையான இவ்வழிதிறக்கப்பட்டால், அது இலங்கைக்கும் சிறப்பாக வடமாகாணத்துக்கும் மிகவும் நல்லதாகும். வடக்கே ஒருதுறை முகத்தைத் திறப்பதாக ஏற்கெனவே கொழும்பு அரசாங்கம் உறுதிமொழி அளித்துள்ளது. அது சீக்கிரத்தில் நிறைவேற்றப்படவேண்டும்.

இயற்கை அன்னை இருநாடுகளையும் பிணைத்துள்ளதாயும் மனிதன் இதைப் பிரிக்கமுடியாதென்றும் இங்குவிஜயம்செய்த இந்தியத் தலைவர் சத்தியமூர்த்தி அவர்கள் கூறினர்கள். அரசியல் முதலிய பல தப்பெண்ணங்கள் நீங்கினால், இப்போதுள்ள பிரயாணத் தடைகள் நீங்கவும், இரு தேச மக்களிடையேயும் நெருங்கிய நல்லுறவுகள் அதிகரிக்கவும் முடியும். இந்த வரவேற்கத்தக்க நல்ல மாறுதலுக்கு, இளம் வீரர் ஆனந்தன் இப்போது தன் வீரச்செயலால் அடிகோலியுள்ளார் அவரை மீண்டும் நாம் பாராட்டுவதுடன், அவரைப் பின்பற்றி இருதேசங்களிடையேயும இன்றுள்ள தப்பெண்ணங்கள் நீங்கி, மீண்டும் பழைய நல்லுறவுகள் ஏற்பட, பல இளம் வீரர்களும் உற்சாகத்துடன் முன் வருவரென்றே நம்புகிறோம்.

—

## கிளிநொச்சியில்

கிளிநொச்சியிலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள ஒரு கடிதத்திலே, அப்பகுதியிலவாழும் ஏழை மக்களை பொலிஸ் அதிகாரிகள் சிலர் துன்புறுத்தி வருவதாயும், அற்பப் பிழைகளுக்கெல்லாம் அடித்தும் உதைத்தும், கீழ்த்தரமான வார்த்தைகளால் ஏசியும் வருவதாகவும் பாரதூரமான புகார் கூறுகின்றார்.

'ஜீப்'பை எடுத்துக்கொண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர் தெருவில் ஓடித்திரிவதாயும், பெண்கள் தனியாகப் போவதைக் கண்டால், அவர்கள் பக்கத்தில் ஜீப்பைச் செலுத்திகிண்டலான வார்த்தைகளபேசி கீழ்த்தரமான பகிடிகள் செய்வதாகவும், மது அருந்திவிட்டு, குற்றவாளிகளைத் தேடுவதாகக் கூறி, சில வீடுகளில் புகுந்து அவர்கள் செய்யும் அட்டகாசம் கூறிமுடியாதென்றும், அவ்வித அக்கிரமங்கள் வேலியே பயிரை மேய்வதுபோலாகுமென்றும் மிக மனவேதனையுடன் தெரிவிக்கின்றார். இதில் ஓரளவும் உண்மையாகுமாயின், பொலிஸின் நடத்தையால் இந்த அரசாங்கத்தின் பெயரே கெட்டு, பொதுமக்களின் நம்பிக்கையையும் மதிப்பையும் அடியோடு இழப்பதாகவுமிருக்கும்.

பொலிஸ்மீது புகார் கூறப்படுவது இது முதல் தடவையல்ல. பார்லிமெண்ட் சபையிலே பல எம். பி.க்களும் பகிரங்கமாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தி இருக்கிறார்கள். என்றாலும் நிலைமை எவ்விதத்திலும் சீர்திருந்தியதாகத் தெரியவில்லை. புகார்கள்பற்றி உடனுக்குடன் விசாரித்து, குற்றம் செய்தவர்கள்மீது உடனுக்குடன் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும் அவசியம். இதைப்பற்றி பொலிஸ் மேலதிகாரிகளும், ஸ்தல எம். பி.யும் கவனித்து இனி இவ்வித அக்கிரமங்கள் நடவாமலும், பொது மக்கள் அங்கு நிம்மதியாக வாழும்படியும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மக்களில் சிலர் சில குற்றங்கள் செய்யலாம். அதற்காக அவர்களைப் பொலிஸ் ஸ்டேஷனில் அடிப்பதும் உதைப்பதும் மெய்யானால், அதுமிகவும் அத்துமீறிய அக்கிரமச் செயலாகும். குற்றம் செய்தவர்களாயின் அவர்கள்மீது நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கலாம். இதைவிட்டு பொலிஸாரே மனிதத்தன்மையற்ற முறையில், காட்டுமிராண்டித்தனமாக மக்களை அடித்து உதைப்பது உண்மைதானா? இதில் உண்மை இருப்பின், இதுபற்றிப் பிரதம மந்திரி உடன் கவனம் செலுத்தி, தன் அரசாங்கத்தின் நற்பெயரையும், பொதுமக்களின் நன்மையையும் கருதி, இனி இவ்வித காரியங்கள் நடக்காமல் கண்டிப்பாக உத்தரவிடவேண்டும். இன்றேல் நிலைமை மிக மிக மோசமாகி, மக்கள் இந்நாட்டில் நிம்மதியாக வாழமுடியாதுபோகும்.

பொலிஸார் மக்களின் நண்பர்களாக, அவர்களுக்கு உதவியாக இருக்கவேண்டியதே முறை. பொது மக்களின் மொழி தெரியாத காரணத்தால், பொலிசுக்கும் பொதுமக்களிடையே நெருங்கிய நல்லுறவு ஏற்பட முடியாமலும், தப்பெண்ணங்கள் அதிகரிக்கவும் ஏதுவாகின்றது. இது மிக முக்கிய விஷயம். பொலிஸ் படையைத் திருத்திஅமைக்கையில், எந்தப் பகுதியில் பொலிசார் சேவைசெய்கின்றனரோ, அப்பகுதியில் வாழும் மக்களின் மொழியை ஓரளவாவது அவர்கள் கட்டாயமாக அறிந்திருக்கவேண்டுமென்ற நிபந்தனையை அமுல் நடத்தவேண்டும். அடிக்கடி இதைப் பற்றி எழுத நேரிடுவது நமக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. என்றாலும், பொதுமக்களின் நன்மையைக் கருதி அரசாங்கம் இதில் இனியும் பராமுகமாக இராமல், மிகக் கண்டிப்பாக இருக்கவேண்டுமென்று மீண்டும் வற்புறுத்த விரும்புகிறோம்.

## கள்ளுக்கடை இருந்த இடத்தில் பள்ளிக்கூடம்

சென்னை, மார்ச் 22

குழந்தைகளின் கல்வியில் காட்டப்படும் அக்கறைபோல் குழந்தைகளின் உடல் நலனிலும் அக்கறைகாட்ட வேண்டுமென்று முதன் மந்திரி திரு. கே. காமராஜர் பெரம்பூரை அடுத்த சிறுவள்ளூரில் மாநகராட்சி மன்ற உயர்நிலைத் தொடக்கப்பள்ளிக்கான புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

சிறுவள்ளூர், நகராட்சி நிர்வாகத்தின் கீழ் 17 ஆண்டுகளுக்கு முன் இணைக்கப்பட்ட ஒன்றாகும். பள்ளிக் கட்டிடம் திறந்துவைக்கப்பட்ட இடத்தில் ஒருகாலத்தில் ஐந்து கல்லா கள்ளுக்கடை என்ற பெயர் பெற்ற கள்ளுக்கடை இருந்தது. அதன் எதிரே பாழுங்கிணறு ஒன்றும், அதைச் சுற்றிலும் முட்புதர்களும் தான் இருந்தன.

—

## திருமலைக்கு காது, இருதய நோய் நிபுணர்கள்

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை மாவட்ட இணைப்புக் கமிட்டியின் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டி எம். ஏ. ஸ்பெல்ட்வின்ட் தலைமையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றபோது அரசாங்க அதிகாரிகளும், திருக்கோணமலை எம். பி. என். ஆர். இராஜவரோதயம், மூதூர் எம். பி.க்களான ஜனப்கள் ஏ. எல். ஏ. மஜீது, எம். ஈ. எச். முகமதலி ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்,

வாரத்திற்கு ஒரு தடவையாவது காது, இருதய நோய் வைத்திய நிபுணர்களை திருக்கோணமலை சிவில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும் என்று திருக்கோணமலை பிரதிநிதி திரு. என் ஆர். இராஜவரோதயம் சுகாதார அதிகாரியைக் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க தான் நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அதிகாரி உறுதியளித்தார்.

மாரி வேளாண்மை விளைச்சலான நெல்லை கொள்வனவு செய்வதில் பெரும் தாமதமும் சேதமும் ஏற்பட்டுள்ளதெனவும் இதனால் ஏழைக் கமக்காரர் கஷ்டப்படுகின்றனர் எனவும் திருமலை எம். பி. திரு. இராஜவரோதயம் செய்து கொண்ட முறையீட்டை தொடர்ந்து அதற்கான வேலைகளைத் தான் கவனிப்பதாகவும், ஏழை மக்களின் கஷ்டத்தைப் போக்குவதாகவும் பொறுப்பான அதிகாரிஉறுதிகூறினர்.

## ஐயாறன் எழுதுவது

கோடிக்கரைக்கு ஆனந்தன் போய்ச் சேர்ந்தாரா இல்லையா? என்று வியாழக்கிழமை இரவு வெகுநேரம்வரை நமக்குப் பலரும் டெலிபோன் செய்து ஆவலுடனும் கவலையுடனும் விசாரித்தவண்ணமிருந்தனர்.

'ஈழநாடு' நிருபரும் ஒரு மோட்டார் வள்ளத்திலே ஆனந்தனைத் தொடர்ந்து சென்று, அவ்வப்போதுசெய்தி அனுப்பச் சென்றிருந்தார். அவரிடமிருந்து ஆவலுடன் ஒவ்வொரு நிமிஷமும் செய்தியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

இரவு வெகுநேரம் செய்தி ஒன்றும் வராததால் உடனே தலைமைக் காரியாலயத்திலிருந்து ஒரு விசேஷ பிரதிநிதி வல்வெட்டித்துறைக்குக் காரில் பறந்து சென்றார். அவரிடமிருந்தும் இரவு 12 மணிவரை தகவல் கிடைக்கவில்லை.

இரவெல்லாம் எங்கள் பலருக்குச் 'சிவராத்திரி'தான். பின்னர் ஒரு டெலிபோன் செய்தி கிடைத்தது. "ஒரு பெரிய செய்தி. நவரத்னசாமியும் 36 பேர்களும் கைதுசெய்யப்பட்டுவிட்டார்கள்! இந்திய கடற்படை நடவடிக்கை. உடனே வருகிறேன். பத்திரிகை அச்சுக்குப் போவதை நிறுத்தி வையுங்கள்" என்று எங்கள் பிரதிநிதி கூறியதும் திடுக்கிட்டோம். ஒன்றுமே புரியவில்லை. ஆனந்தன் விஷயத்தைப்பற்றி அவர் ஏதும் கூறாமல் இருந்தது திகைப்பளித்தது.

* * *

கிணறு வெட்டப் பூதம்புறப்பட்டதென்பார்கள். அந்த மாதிரி, ஆனந்தன் பாக்குநீரிணையை நீந்திக் கடக்கையில் அவருக்குத் துணையாகச் சென்றவர்கள் "கள்ளக்கடத்தல்காரர்கள்" என்று இந்திய கடற்படையினர் கைதுசெய்து பிடித்துக் கொண்டு போவரென்று நம்மில் யாரும் எதிர்பார்த்தோமா? ஆனால் இவ்வளவு பேர் செல்லுகையில் முன் கூட்டியே, அக்கரையிலுள்ள அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்து, அவர்களது ஒத்துழைப்பையும் உதவியையும் கேட்டுப் பெற்றிருந்தால், இவ்விதம் ஏற்பட்டிராதென்கிறார் ஓரன்பர். ஆனால் அனுமதி கேட்டால் அது கிடைத்திருக்குமா?

'ஈழநாடு' நிருபரும் கைது செய்யப்பட்டுவிட்டதாக பின்னர்தான் தகவல் கிடைத்தது!

இந்திய ஹைகமிஷனர் இவ்விஷயமாக அவசரத் தந்தி அடித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்காக அவருக்கு விசேஷ 'தாங்க்ஸ்' கூறவேண்டும். இலங்கை அரசாங்கம் இதுபற்றி என்ன செய்கிறதென்பது தெரியவில்லை. எப்படியும் நமது நிருபர் திரும்பி வந்ததும் அவர் பாஸ்போர்ட், விஸா, ஊசி குத்தல் எதுவுமின்றி அக்கரை சேர்ந்த ருசியான கதைகளைத் தெரிவிக்கக்கூடும். அதையெல்லாம் கேட்க உங்களைப்போல், ஆவலுடன் காத்திருக்கிறேன்.

* * *

வண்ணை மணிபாகவதர் அடுத்த மாதம் மலாய் நாட்டுக்கும், பர்மா முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் சென்று சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு ஜயந்தி விழா சம்பந்தமாக, கதாப்பிரசங்கங்கள் செய்யப்போவதாக அறிய மகிழ்ச்சியாயிருந்தது. சென்ற வருடம்தான் அவர் மலாயா சென்று திரும்பினர். பிரயாணக் கெடுபிடிகள் இங்கு மிக அதிகமாக இருக்கையில், அவருக்கு இந்த அனுமதி கிடைத்தது ஆச்சரியமல்லவா? முருகன் துணை இருந்தால் எதுதான் நடவாது? என்ன தடையும் என்ன செய்யும்?

சிங்கப்பூரிலே ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் உப தலைவராகா

(5-ம் பக்கம்பார்க்க)

# "நாடகக் கலைக்கு கட்டுப்பாடு அவசியம்"

## மாணவர் மன்றக்கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

'நாடகத்தில் பெண்களும் பங்குபற்றவேண்டும். நடிப்புக் கலை கைவரவேண்டுமானல் நாம் சில ஒழுங்கு முறைகளைக் கையாளவேண்டும். நாடகக் கலைக்கு கட்டுப்பாடு அவசியம்' என்று இலங்கை வானெலி நாடகத் தயாரிப்பாளர் திரு. எஸ். சண்முகநாதன் திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கூட்டத்திற்கு செல்வன் ஆ மகேஸ்வரன் தலைமைவகித்தார். செல்வன் சு. நடராசா வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. சண்முகநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நல்ல குருவிடம் சரியான முறையில் பயின்றால் சிறந்த நடிகராகத் திகழலாம். நாடகங்களில் சினிமா உத்திகளைப் புகுத்துவது தவறு. அப்படிச் செய்தால் அவற்றைச் 'சினிமாடகம்' என்று அழைக்கலாமேதவிர, 'நாடகம்' என்று அழைக்க முடியாது. எம். ஆர். ராதா, சகஸ்ரநாமம், டி. கே. சண்முகம் போன்றவர்கள் சிறந்த நடிகர்கள். அவர்கள் சினிமாவில் உழைக்கும் பணம் முழுவதையும் சிறந்த நாடகங்களை அரங்கேற்றுவதற்காகச் செலவு செய்கிறார்கள். இதிலிருந்தே சினிமாவிலும் பார்க்க நாடகம் சிறந்தது என்பது தெரியும். நாடகத்தில் எந்த நடிகனும் தன்னை மறந்து நடிக்கக்கூடாது. 'நான் நடிக்கிறேன்' என்ற உணர்வு எந்த நேரமும் அவனிடம் இருக்கவேண்டும். அப்படியானல் தான் நடிகனாக எவரும் வர முடியும்."

செல்வி அ. சுலோசனதேவி நன்றியுரை கூறினர்.

# எரிமலை வெடித்து 1000 பேர்மாண்டனர்!

ஜாகர்த்தா, மார்ச் 22

**இந்த வாரத் துவக்கத்தில் இந்தோனேஷியாவை அடுத்துள்ள பாலித் தீவில் எரிமலை வெடித்ததில், ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் மாண்டனர் என்று இந்தோனேஷிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். எரிமலை வெடித்த இப் பகுதியை இந்தோனேஷிய ஜனாதிபதிபதி டாக்டர் சுகர்ணோ "அழிவுநிறைந்த பகுதி" என வர்ணித்துள்ளார்.**

இவ்வாரத் துவக்கத்தில் பாலித் தீவிலுள்ள ஒரு எரிமலை வெடித்ததில், 150 பேர் மரணமானார்கள் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த எரிமலை சீற்றத்தினால் ஆயிரத்துக்குமதிகமானவர்கள் மாண்டனர் என்று இப்பொழுது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. எரிமலை வெடித்ததினால், ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனரென்றும் சுமார் நாலாயிரம்பேர் வீடிழந்துள்ளனரென்றும் கூறப்படுகிறது. இப் பகுதியில், கட்டிடங்களும் வீடுகளும் சேதமுற்றுக் காணப்படுகின்றன.

எரிமலை வெடித்த பகுதியை இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ "அழிவுநிறைந்த பகுதி" என வர்ணித்துள்ளார்.

### ஐ. நா. உதவி

பாலித் தீவிலுள்ள எரிமலை வெடித்ததினால் அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உதவி கிடைக்கும் என்று ஐக்கியநாடுகள் சபை பொதுக்காரியதரிசி யுதாண்ட் அறிவித்துள்ளார்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இந்தோனேஷிய செஞ்சிலுவைச் சங்கடம் உணவும்,உடையும் அளிக்க முன்வந்திருக்கிறது. எரிமலையின் சீற்றத்தினால்,ஏராளமான மக்கள் வின் தென்பகுதிக்கு ஓடிவிட்டனர்

# நிதிமந்திரியின் கோரிக்கை
## பார்லிமெண்ட் அங்கீகாரம்

கொழும்பு, வெள்ளி

**திறைசேரி உண்டியல்களிலிருந்து பதினைந்து கோடி ரூபாய் கடனுகப் பெறுவதற்கு நிதி மந்திரிக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை அங்கீகாரமளித்துள்ளது.**

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்துவைக்கும்பொருட்டு திறைசேரி உண்டியல்களிலிருந்து 15 கோடி ரூபாய் கடனுகத் தரும்படி நிதிமந்திரி அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்.

இது சம்பந்தமான மசோதா நீண்ட விவாதத்துக்குப் பின்னர் இன்று அதிகாலை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அதிகாலை இரண்டு மணிக்கு நடைபெற்ற வாக்கெடுப்பில் 41 பேர் சாதகமாகவு, 7 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர்.

அங்கத்தவர்களின் கண்டனங்களுக்கு நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல பதிலளிக்கையில், உணவுப் பொருள்களினதும் விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் விரும்பவில்லையென்றும் இதுதான் அரசாங்கத்தின் கொள்கையென்றும் கூறினர்.

1955-ம் ஆண்டிலிருந்து எமது வெளிநாடடுச் செலாவணியில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்திருக்கிறது. ஆனால் கடந்த நான்கு மாதங்களில் வெளிநாட்டுச் செலாவணியில் குறிப்பிடத்தக்க முறையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது என்றும் மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்துவைப்பதற்காக மக்கள் மீது வரிகளைச் சுமத்த அரசாங்கம் விரும்பவில்லை. இதன் காரணமாக வேதான் திறைசேரி உண்டியல்களின் தேவை ஏற்பட்டது. நாடு எடுத்திருக்கும் இப்புதிய நடவடிக்கை, புதிதானதல்ல. இந்திய பட்ஜட்டில் ஏற்பட்டிருக்கும் செலவை சரிக்கட்டுவதற்காக இந்திய நிதிமந்திரி திரு. மொரர்ஜிதேசாய் இப்படியான நடவடிக்கையே மேற் கொண்டிருக்கிறர். இதற்கு இந்திய அரசாங்கம் அங்கீகாரமளித்திருக்கிறது."

## ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவுகள்
### மே மாதத்தில் வெளியாகும்

கொழும்பு, வெள்ளி

கடந்த டிசம்பர்மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய சுமார் ஒருலட்சத்து அறுபத்து ஐயாயிரம் மாணவர்கள், தங்களின் மறுமொழியை எதிர் வரும் மே மாதம் அறிவார்கள்.

பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களுக்கு, புதிய பரீட்சை வைத்தபடியாலும், அதிகமான விண்ணப்பதாரர்கள் பரீட்சை எடுத்தபடியாலும், பரீட்சை முடிவு வரத் தாமதமேற்படும் என முன்பு அறிவிக்கப்பட்டது.

மற்ற வருடங்களைப்போல், இவ் வருடத்திலும், பரீட்சை முடிவை மே மாதம் வெளியிடும் பொருட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பரீட்சைக் கமிஷனர் திரு. எஸ். ஈ. ஆர். பேரின்பநாயகம் தெரிவித்துள்ளார்.

எதிர் வரும் மே மாதத்தில் பரீட்சை முடிவுகள் வெளிவரும்பொருட்டு அதிகமான அதிகாரிகளை அதிக நேரமாகக் கடமையாற்றும்படி கல்விப் பகுதி தெரிவித்துள்ளது.

## "கடல் பாதுகாப்பை விஸ்தரிக்கவேண்டும்"

புதுடில்லி, மார்ச் 21

இந்தியாவின் கடல் எல்லைப் பாதுகாப்பை விஸ்தரிக்கவேண்டிய அவசியத்தை பிரதமர் நேரு, இன்று வற்புறுத்தினர். பண்டைக்காலத்தில் கடல் துறையில் இந்தியா முக்கியத்துவம் பெற்றிருந்தபோதிலும் மத்தியகாலத்தில், இதில் சிரத்தைகாட்டாததால் தான் ஐரோப்பிய நாடுகள் இந்தியாவை அடிமைப்படுத்தின என்றும் அவர் கூறினர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ள சுவாமி சித்தாத்மானந்தா, இதற்கான விசேஷ ஒழுங்கு செய்திருப்பதுடன், போகவர விமான டிக்கட்டையும் அனுப்பிவிட்டாராம். பாகவதருடன் வயலின் ஷண்முகானந்தமும் இம்முறை செல்லுகின்றுர்.

சிங்கப்பூர் அரசாங்க கலாசார மந்தரியான ராஜரத்னம் தான் இவ்விழாச் சபைக்குப் போஷகராம். பாரத நாட்டிலே எவ்வளவோ புகழ் பெற்ற கதாப்பிரசங்கிகளிருந்தும், நமது பாகவதருக்கு இந்த மேலான'சான்ஸ்' கிடைத்ததுபற்றி நாம் பெருமை கொள்ளலாமல்லவா!

* * *

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள், மூர்த்தி அவனிருக்கும் வண்ணங்கேட்டாள், பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானுள், அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள் அகன்றுள் அகலிடத்தார் ஆசாரத்தை, தன்னை மறந்தாள் தன்னுமங்கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

–திருநாவுக்கரசர்.

## சிரமதான இயக்கம்

கிளிநொச்சி, வெள்ளி

"சிரமதான இயக்கம் நல்ல முறையில் செயல்படவேண்டும். சிங்களப்பகுதியில் உள்ள சிரமதான இயக்கச் சகோதரர்களையும் அழைத்து சிரமதான இயக்கத்திற்கு வலுவூட்டவேண்டும். இதனுல் நாட்டில் ஒற்றுமையும் பரஸ்பர உதவி மனப்பான்மையும் உருவாகும்" என்று முதலியார் செ. சின்னத்தம்பி உருத்திரபுரம் காந்தி சேவாசங்க மண்டபத்தில் நடைபெற்ற சிரமதான இயக்க ஏற்பாட்டுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். திரு. அ. ச. விசுவநாதன் தலைமைவகித்தார்.

அடுத்தமாதம் 19, 20, 21-ம் திகதிகளில் சிரமதான இயக்கம் உருத்திரபுரத்தில் ஆரம்பமாகும். இதற்காக ஒரு சபை நியமிக்கப்பட்டது.

சிரமதான முகாமின் தலைவராக திரு. கே. நேசையா, உப தலைவர்களாக: திரு. ஏ. டி. அரியரத்தின, திரு. பாசில்றி பெரு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## நீரில் மூழ்கி மாணவன் மரணம்

சாவகச்சேரி, வெள்ளி

மட்டுவில் மகாவித்தியாலய மாணவனுன க. குமாரசாமி (16 வயது) தாமரைப் பூ பறிக்க குளத்தில் இறங்கி மரணமான சம்பவம் இங்கு நிகழ்ந்துள்ளது.

நேற்று நண்பகல் விளைவேரி வயலில்உள்ள தாமரைக் குளத்தில்பூபிடுங்க தனியே இம்மாணவன் சென்றுர். குளத்தில் மூழ்கிய இவரைப் பெண்கள் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயன் தரவில்லை. பின் அந்த மாணவன் வெளியே எடுக்கப்பட்டு முதலுதவி அளிக்கப்பட்ட பின் ஆஸபத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் மரணமானுர். மரணவிசாரணை நடத்திய அதிகாரி நீரில் மூழ்கியதனுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## வரியிறுப்பாளர் சங்கம்

மாதகல், வெள்ளி

மாதகல் வரியிறுபபோர் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வீ. நவரத்தின்ராசா, உபதலைவர்: திரு. க. அம்பலவாணர், காரியதரிசி. திரு ச. பா. யோசெவ், உப காரியதரிசி: திரு. கு. செல்வரத்தினம், தனுதிகாரி: திரு! அ. க. அம்பலவாணர்.

## போட்டி நடைபெறவில்லை

திருமலை, வெள்ளி

திருகோணமலை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சன்ரைஸ் உதைபந்தாட்டக் குழுவிற்கும், டயமண்ட்ஸ உதைபந்தாட்டக் குழுவிற்குமிடையே நடைபெறவிருந்த போட்டி மத்தியஸதர் சமுகமளிக்காத காரணத்தால் நடைபெறவில்லை. இப்போட்டி சரியாக 4-30 மணிக்கு நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இரு குழுக்களும் போட்டி நடைபெறும் மைதானத்திற்கு வந்தன. போட்டியைக்காண ஏராளமான ரசிகர்கள் மைதானத்தைச் சுற்றி குழுமியிருந்தனர். போட்டியை நடத்த மத்தியஸதர் வரவில்லாத காரணத்தினுல் ஏமாற்றத்துடன் ரசிகர்கள் வீடு திரும்பினர்.

## வள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், சனி

வள்ளுவர் விழா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சிரேஷ்ட மாணவர் மன்றத்தில் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் திரு. மு. ஜெயரத்தினம் திருவள்ளுவரைப் பற்றிப் பேசினுர்.

அரியாலை சன சமூக நிலையமும் திரு. ச. தர்மலிங்கம் தலைமையில் வள்ளுவர் விழாவைக் கொண்டாடியது. திருமதி சோமசுந்தரம் விரிவுரை நிகழ்த்தினுர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. திரு. கிருஷ்ணசிங்கம் நன்றி கூறினர்.

## "உணவு, புடவை தட்டுப்பாடு இல்லை"
### புதிய வருடத்தில்

கொழும்பு, வெள்ளி

சிங்கள, தமிழ் புதுவருடத்திற்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களில் போதியளவு உணவு வகைகளையும் புடவைகளையும் சேர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினவுடன் கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா நிர்வாகசபை கலந்தாசித்தபோது மேற்கண்ட தகவலைத் தெரிவித்தது.

சீனுவிலிருந்து அனுப்பப்பட்ட சாரங்கள், சேலைகள் என்பன இம்மாதம் இங்கு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது. உணவு வகைகளுக்கும்'ஆர்டர்' செய்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

## கண்டனங்களை வெளியிட்டது

பீக்கிங், மார்ச் 22

சீன கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கி, மற்றைய கம்யூனிஸ்ட் கட்சிகள் வெளியிட்ட கண்டனங்களை, சீன கம்யூனிஸ்ட் பத்திரிகையான "பீப்பிள்ஸ் டெயிலி" முதற்தடவையாக வெளியிட்டிருக்கிறது. சமாதான சகவாழ்வுக் கொள்கை, பிரதேச ஆசை சம்பந்தமாக மற்றைய கம்யூனிஸ்ட் கட்சிகள் சீன கம்யூனிஸ்ட் கட்சிமீது கண்டனம் தெரிவித்திருந்தன.

மற்றைய கம்யூனிஸ்ட் கட்சிகள் தெரிவித்திருந்த கண்டனங்களை வெளியிட்டிருக்கும் "பீப்பிள்ஸ் டெயிலி" பத்திரிகை, இக் குற்றச்சாட்டுகளுக்கு விரைவில் மறுப்புக் கட்டுரைகள் வெளியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பதவிக்காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரத்தின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்த நபர்

பெங்களூர், மார்ச் 22

சித்தசுவாதீனம் இழந்தவர் எனக் கருதப்படும் ஒருவர் இங்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்துள் பிரவேசித்து அவரது அறைக்குள் நுழைய முயன்றுர்.

ஐ.ஜி.பி.அறைக்குள் நுழைய விடாமல் அவரை அங்கிருந்த பொலிஸ்காரர் ஒருவர் தடுத்ததும் அந்தநபா அங்கு கீழே கிடந்த ஒரு கண்ணடித் துண்டை எடுத்து தம்மைக் காயப் படுத்திக்கொண்டார்.

உல்ஸார்கேட் பொலிசார் உடனே ஸ்தலத்திற்குவிரைந்து அவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்றனர். அவர் சிகிச்சை செய்யப்பட்டு பிறகு வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

## அபிவிருத்தி வரி இனி இல்லை

கொழும்பு, வெள்ளி

தேசிய அபிவிருத்தி வரி அறவிடப்படுவது இம்மாத முடிவுடன் நிறுத்திவைக்கப்படுமென்றும் ஆனல் தேசிய அபிவிருத்தி வரி இம்மாதம் செலுத்தப்படவேண்டுமென்றும் நிதி அமைச்சரின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. போலியர் ஜனப்பிரதிநிதிகள் சபையில் கூறினுர்.

## தீண்டாமை ஒழிப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு, மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற போது கடைகளில் தீண்டாமை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றிய தீர்மான மொன்று விவாதிக்கப்பட்டது. சங்க உப விதிகளுக்கு முரணுனதாக நடந்து கொள்ள சபைக்கு அதிகாரமில்லையாதலால் தீண்டாமை ஒழிப்பில் கடைக்காரர்களின் ஒத்துழைப்பை நாடுவதே சிறந்ததெனத் தீர்மானிக்கப்பட்டது.

## கோரிக்கை

உடுப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் 28-ந் திகதி நடைபெறும் கட்டைவேலி கிராம சபை மாதந்தக்கூட்டத்தில், புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் பட்டினசபைக்கு கரவெட்டி பட்டினசபை யென்றே அல்லது நெல்லியடி பட்டின சபையென்றே பெயரிடவேண்டும் என்பது பற்றியும், தற்போது கடமையாற்றி வரும் அரசினர் ஆயுள்வேத வைத்தியருக்குத் தமிழ்மொழி தெரியாததால் அவரை மாற்றி தமிழ் ஆயுள்வேத வைத்தியரை நியமிக்கும் படியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

## ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு-மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலயத்தின் எட்டாவது திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது.

## தமிழரசு வாலிபமுன்னணி

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி தமிழரசு வாலிப முன்னணிக் கிளையின் ஆதரவில் வருகிற ஞாயிற்றுக கிழமை அளவெட்டி அளகொல்லை விநாயகராலய வீதியில் பொதுக் கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

தமிழரசு எம். பிக்கள் பலர் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தவிருக்கிறுர்கள்.

# நவீன முறையில் விளையாட்டு அரங்கு

## யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் விளையாட்டு அரங்கு இல்லாமலிருந்து வந்த குறையை நிவர்த்தி செய்யும்வகையிலும், பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் ஒரு பகிரங்க விளையாட்டு அரங்கு அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள ஒரு சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் கூடிய கூட்டத்தில் யாழ்ப்பாணம் விளையாட்டுஅரங்குச்சபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இக் கூட்டம் யாழ்ப்பாண மாநகரசபையினால் முன் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண விளையாட்டு அரங்குச் சபையின் தொடர்ச்சியாகவே நடைபெற்றது. இச் சபை, மாநகரசபை முன் தெரிவுசெய்த இடமான கரையூரில் இல்லாமல் மத்திய இடமான யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தைய விளையாட்டு அரங்குக்கான இடமாக ஏகமனதாகத் தீர்மானித்தது. இந்த விளையாட்டு அரங்கு சபையின் விதிகள் பற்றி பொலிஸ் உதவி அதிபர் திரு. ஏ எஸ். மரியநாயகம் விளக்கிக் கூறியபின், அதன் மீது நீண்டநேர விவாதம் நடைபெற்றது. பின்னர் அந்த விதிகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.

இந்த விளையாட்டுஅரங்கு சகல நவீன வசதிகளுடன் அமைந்ததாகவும் 7500 பேர் ஒரேநேரத்தில் கண்டுகளிக்கக் கூடிய ஒரு அரங்காகவும் அமையும் என்பதையும் திரு. மரியநாயகம் தெரிவித்தார்.

விளையாட்டு அரங்குக்குரிய பணம் சேகரிப்பதற்கு 7-4-63ல் ஓர் வண்டிச் சவாரியும், அகில இலங்கை வாணவேடிக்கைப் போட்டியும் மிகப் பெரிய அளவில் நடத்துவதெனவும் இதற்குரிய தமாஷா வரிகளை நீக்குவதற்கு ஸ்தலஸ்தாபன அனுமதி பெற்றிருப்பதாகவும், இவ் விழாமூலம் விளையாட்டரங்குக்கு ஆகக் குறைந்ததாக 10 ஆயிரம் ரூபாய் சேர்க்கமுடியுமெனவும் திரு. மரியநாயகம் கூறினர்.

யாழ்ப்பாணக் கோட்டையை அடுத்துள்ளதும், பொலிஸ் விளையாட்டு மைதானத்துடன் சேர்ந்துள்ளதுமான புதைபொருள் ஆராய்ச்சிப்பொருட்கள் எதற்கும் எதுவித சேதமில்லாமல் இந்த அரங்கு அமைக்க உத்தரவுகோரி புதைபொருள் ஆராய்ச்சி அதிபருக்கும், மைதானம் சம்பந்தமாக உள்நாட்டமைச்சருக்கும் விண்ணப்பித்திருப்பதாகவும் திரு. மரியநாயகம் மேலும் கூறினர்.

விளையாட்டுஅரங்குச் சபை உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர்தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. பி. வித்தாச்சி (அரசாங்க அதிபர்); உபதலைவர்கள்: டபிள்யு. அரசுவால்டன் (மாஜிஸ்டிரேட்), ஏ. டி. துரையப்பா (எம். பி.), ஜே. வான்சன்டன் (பொலிஸ் அதிபர்), டி. டி. ஜயசிங்கா (மாநகரசபைக் கமிஷனர்), டாக்டர் சி. மயில்வாகனம், ஐ பி. துரைரத்தினம் (கல்லூரி அதிபர் சங்கத்தலைவர்) காரியதரிசி; திரு. ஏ. எஸ். மரியநாயகம் (பொலிஸ் உதவி அதிபர்); உதவிக் காரியதரிசி திரு வி. கே. மயில்வாகனம் பொருளாளர்; திரு. வி. சத்தியநாதன் அரங்குநிலையக் காரியதரிசி ஆர் ராசையா, உதவிக்காரியதரிசி, திரு இ.கே.குட்டையா, கணக்குப் பரிசோதகர் திரு. ஏ. வி ராஜசிங்கம் (இலங்கை வங்கி) காணிஅளவையாளர் திரு. சி. சி. குமாரசாமி

விளையாட்டரங்கு நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக ஒரு உபசபை தெரிவுசெய்யப்பட்டது. இச்சபையில் திருவாளர்கள் ஆர் ஜே. துரைராஜா டி. ஐ ஏபிரகாம், கே. இராசையா, வை. டி. யோகநாதன் இ. கனகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

பொறுப்பாளர்களாக திருவாளர்கள் ஜே. வான்சன்டன் (பொலிஸ் அதிபர்), ஏ. ஈ தம்பர் (மத்திய கல்லூரி அதிபர்) ஏ. டி. துரையப்பா (யாழ். எம் பி), சி. சபாரத்தினம் (இந்துக் கல்லூரி அதிபர்), வி. சத்தியநாதன் (டிரேட் அன்டிரான்ஸ்போர்ட்பொறுப்பாளர்)

---

## கொழும்பில் தண்ணீர் நெருக்கடி?

கொழும்பு, வெள்ளி

லபுகம நீர்த்தேக்கத்திலுள்ள நீர் மட்டம், 28 அடிக்குக்குறைந்துள்ளதென்றும், இப்பொழுது இருக்கும் தண்ணீர் கொழும்பு நகரத் தேவைகளுக்கு 40 நாட்களுக்கு மட்டுமே போதும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மாநகரசபையைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவிக்கையில், தண்ணீர் உபயோகிப்பதில், வரிசெலுத்துபவர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்றும் உபயோகமற்ற முறையில் தண்ணீரைப் பாவிப்பதினால் தண்ணீர் நெருக்கடி ஏற்படலாம் என்றும் கூறினர்.

லபுகம நீர்த்தேக்கத்தில் நீர் மட்டம் குறைந்து இருப்பது பெரும் அபாயத்தைக் கொடுத்துள்ளது என்றும், வரட்சி மேலும் நீடிக்குமானால் கொழும்பு நகரம் பாதிக்கப்படலாமென்றும் அவர் கூறினர்.

---

## பணம் அனுப்ப அனுமதி

பாங்காக், மார்ச் 22

தாய்லாந்திலுள்ள இந்திய சமூகத்தினர், கம்யூனிஸ்ட் சீனவுடன் சண்டை காரணமாக தங்களுடைய நாட்டுக்கு உதவுவதற்காக நிதி திரட்டி இந்தியவுக்கு அனுப்ப அரசாங்கம் அனுமதியளித்திருப்பதாக உள் நாட்டு விவகார மந்திரி ஜெனரல் ப்ரபஸ் சாருஸேதியன், நிருபர்களிடம் கூறினர்.

இங்குள்ள இந்தியர்கள் தங்களுடைய நாட்டுக்குப் பணமும் பண்டமும் அனுப்ப அனுமதிக்கும்படி இங்குள்ள இந்திய தூதர் திரு. ராஞ்சன்சில் தாய்லாந்து அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்.

அரிசி, பீன்ஸ் போன்ற விவசாயப் பண்டங்களையும், மற்றப் பொருள்களையும் தாய்லாந்தில் வாங்கி இந்தியாவுக்கு அனுப்பும்படி மந்திரி இந்திய சமூகத்தினருக்கு யோசனை கூறினர்.

---

தமிழ் நாட்டில்

## தினத்துக்கு இரு தொழிற்சாலைகள்!

சென்னை, மார்ச் 22

தமிழ்நாட்டில், ஒரு நாளைக்கு இரு தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1961-ம் ஆண்டுமுதல் 1962-ம் ஆண்டுவரைக்கான ஒரு வருடகாலத்தில், தமிழ் நாட்டில் 689 தொழிற்சாலைகள் நிறுவப்பட்டனவென்று அறிவிக்கப்பட்டுள்ளது. 1961-ம் வருடத்தில் 5903 தொழிற்சாலைகளும், 1962-ம் வருடத்தில் 6492 தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி சென்ற வருடங்களை விட அதிகரித்திருக்கிறதென்றும் மற்றும் சைக்கிள், பருத்தி உற்பத்தியும் அதிகரித்திருக்கிறதென்றும், கைத்தறி தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

---

# “வர்த்தகக் கல்வியில் பாரபட்சம்வேண்டாம்”

## பிரதமர், கல்வி அமைச்சருக்கு மூதூர் எம். பி. தந்தி

திருமலை, வியாழன்

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, அமைச்சர் ஜனுப் பதியுதீன் மஹ்மூத் ஆகியோருக்கு மூதூர் முதல் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். முகமதலி ஓர் அவசரத்தந்திமூலம் ஓர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்தந்தியில் அவர் கூறியிருப்பதாவது:

“1-3-63-ல் வெளிவந்த அரசாங்க வர்த்தமானியில்விசேஷ வர்த்தக ஆசிரிய பயிற்சிக்கு ஆசிரியர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம் என்று இருப்பதினால் தமிழ் மாணவர்கள் பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அதே சமயத்தில் 1957-ம் வருடத்தில் இருந்து வர்த்தகக்கல்வி பயின்ற சிங்கள மாணவர்கள் வர்த்தக ஆசிரியப் பிரவேசப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கக் கூடியதாக இருக்கையில் தமிழ் மாணவர்களைப் புறக்கணிக்கும் காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. மேலும் நடந்த வருடங்களில் தமிழ்ப் பகுதியில் வர்த்தக ஆசிரியர்களை நியமிக்காத காரணத்தினால் பிரவேசப் பரீட்சைக்கு ஐந்து ஆசிரியர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். ஆகவே வர்த்தகக்கல்வி பயிலுற தமிழ் மாணவர்கள்மீது இரக்கம் கொண்டு “ஆசிரியர்கள் மாத்திரம்” என்றிருப்பதை நீக்கி மாணவர்களும் விண்ணப்பிக்கக்கூடிய முறையில் உடனடியாகக் கவனமெடுத்து ஒழுங்குகளைச செய்யவும். சிங்கள மாணவர்களுக்கு இருக்கும் நிபந்தனைகள் தமிழ்மாணவர்களுக்குமறுக்கப்படுவது நீதியற்ற பாரபட்சமானநடவடிக்கைஎன்பதையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.”

---

## நால்வருக்கு மரணதண்டனை!

### சுப்பிரிண்டன்கொலை வழக்கில் தீர்ப்பு

கண்டி, வெள்ளி

எல்பின்டல தோட்டத்தைச் சேர்ந்த சுப்பிரிண்டனைக் கொலை செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு எதிரிகளுக்கு, கண்டி நீதியரசர் திரு. எச். டபிள்யூ. ஆர். வீரசூரியா நேற்று மரண தண்டனை விதித்தார்.

நோட்டன் பிறிட்ஜிலுள்ள எல்பின்டல தோட்டத்தைச் சேர்ந்த சுப்பிரிண்டன் திரு. என். எல். பி. பெர்னுண்டோவை 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதி கொலை செய்ததாக அதே தோட்டத்தைச் சேர்ந்த 10 தொழிலாளர்கள் மீது குற்றம் சாட்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆறு எதிரிகளுக்கும் (முதல் நான்கு எதிரி உட்பட) எதிரான சாட்சியங்கள் எதுவுமில்லாததால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். 4 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது

---

## யந்திர மூளை தயாரிக்கும் பத்திரிகை

நியூயார்க், மார்ச் 22

“ஒக்கலாம சிட்டி டைம்ஸ்” என்னும் பத்திரிகையின் பதிப்புக்களை ஓர் யந்திர மூளை தயாரிக்கிறது.

டைப் அடிப்பவர்கள் நீண்ட தாள்களின் தொளைகள் விழும்படி அச்சிட்டு அந்த நாடாக்களை யந்திர மூளைக்குச் செலுத்துகின்றனர். அவற்றைச் சரி பார்த்துத் திருத்தி வகைப்படுத்திக் கொடுத்துவிடுகிறது.

---

## சிறையின்முன் சத்தியாக்கிரகம் செய்வார்?

பெர்லின், மார்ச் 23

நீண்டகாலமாக மேற்கு பெர்லினில் வசித்துவருபவரும் சத்தியாக்கிரகமுறையில் நம்பிக்கையுள்ளவருமான திரு. நாக்ஜுட்ஷி கிழக்கு ஜெர்மனியில் உள்ள அரசியல் கைதிகளின் சார்பில் மார்ச் 26-ம் திகதியன்று கிழக்கு பெர்லினுக்குச் செல்லும் வாயிலில் நின்று ஆட்சேபம் தெரிவிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

கிழக்கு ஜெர்மனியில் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஹாரிசீடல் மற்றும் 14 ஆயிரம் அரசியல் கைதிகளுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கோரும் அட்டையைத்தாங்கி அவர் நிற்பார். மேற்கு ஜெர்மனிக்குச் செல்ல கிழக்கு ஜெர்மனியாருக்கு உதவி செய்வதற்காக ஹாரிசீடலுக்குச் சென்ற டிசம்பரில் கிழக்கு ஜெர்மன் சுப்ரீம் கோர்ட் ஆயுள் தண்டனை விதித்தது.

திரு. ஜுட்ஷி கிழக்கு ஜெர்மன் அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அக் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்று தாம் கேட்கவில்லை என்றும் சிறையில் வாடும் அவர்களுக்கு அனுதாபம் காட்டவே தாம் விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

---

## ‘மொரார்ஜி சுண்டல்!’

திருச்சி, மார்ச் 22

தங்கக் கட்டுப்பாடு உத்தரவையடுத்து மொரார்ஜி தங்கம் மட்டுமின்றி மொரார்ஜி சுண்டலும் கிளம்பியிருக்கிறது.

மாணிக்கப்பத்தர் என்ற வேலையில்லாத பொற்கொல்லர் ‘மொரார்ஜி சுண்டல்’ என்ற பெயரில் சுண்டல் விற்க ஆரம்பித்திருக்கிருர்.

தங்கக் கட்டுப்பாடு உத்தரவால் தனது குலத்தொழிலைக் கைவிட்டு, அழகு அழகாக ஆபரணங்கள் செய்த கையால் சுண்டல் விற்றுப் பிழைக்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்கிறது என்று மாணிக்கப்பத்தர் கண்ணீர் விட்டுச் சொன்னுர்.

தனது சுண்டல் 14 காரட் தங்க நிறத்தில் இருப்பதனல் அதற்கு ‘மொரார்ஜி சுண்டல்’ எனப் பெயர் வைத்தது பொருத்தமே என்று சொன்னுர் அவர். தினசரி 4 ரூபாய்க்கு சுண்டல் விற்பதாகவும் இதில் 1-50 லாபம் கிடைப்பதாகவும் சொன்னுர்

---

## 44 கம்யூனிஸ்ட் கட்சிகள் கண்டனம்

பீக்கிங், மாாச் 21

44 நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள், சீனக்கம்யூனிஸ்ட் கட்சிமீது கண்டனம் தெரிவித்திருப்பதாக “பீக்கிங்டெய்லி” என்ற சீனப்பத்திரிகை ஒத்துக்கொண்டிருக்கிறது. 1962 நவம்பர் மாதம் முதல் இவ்வித கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாயும், கொள்கைவெறி, ராணுவவாதம், சந்தர்ப்ப மனப்பான்மை, போர்மனப்பான்மை, ஆக்கிரமிப்பு நோக்கம் ஆகியவற்றை சீனக் கம்யூனிஸ்ட்கட்சி செய்திருப்பதாக, அவைகள் குற்றஞ்சாட்டியுள்ளன என்று அது கூறியது.

---

# பருத்தித்துறைத் தொகுதி உடற்பயிற்சிப் போட்டி

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறைப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று காலை சர்வகலாசாலை உடற்பயிற்சி அதிபர் திரு. எல். டி. பி. கனதுங்க தலைமையில் நடைபெற்றது.

வட்டார வித்தியாதரிசி திரு. எஸ். பி. சிவபாதம் ஏற்படு செய்திருந்த உடற்பயிற்சிப் போட்டிகளில் பின்வரும் பாடசாலைகள் முதல் ஸ்தானத்தைப் பெற்றன:-

முதல் பிரிவுப் பாடசாலைகளின் போட்டி:- 13 வயது ஆண்கள் பிரிவு - சிதம்பராக் கல்லூரி, 16 வயது ஆண்கள் பிரிவு-ஹாட்லிக் கல்லூரி.

பெண்கள் போட்டி:- 13 வயது, 16 வயது, 19 வயதுப் பிரிவுகள் மூன்றிலும் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி முதல் இடங்களைப் பெற்றது.

இரண்டாவது பிரிவுப் பாடசாலைகளின் போட்டி:- 13 வயது ஆண்களில் பொலிகண்டி சைவ வித்தியாசாலையும், 16 வயது ஆண்களில் புலோலி கிழக்கு அரசினர் பாடசாலையும் முதல் இடங்களைப் பெற்றன.

13 வயதுப் பெண்களில் வல்வெட்டித்துறை ஏ. எம். பாடசாலையும், 16 வயதுப் பெண்களில் பருத்தித்துறை சென். தோமஸ மகளிர் பாடசாலையும் முதல் இடங்களைப் பெற்றன.

---

## மதஸ்தாபனங்களுக்கு வரிஇல்லை

கொழும்பு, வெள்ளி

மதஸ்தாபனங்களின் மீது உள் நாட்டு வரி விதிக்கப்படமாட்டாதென நிதி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல நேற்று பார்லிமெண்டில் கூறினர்.

ஆனல் மத ஸ்தாபனங்களில் வியாபாரம் எதுவும் நடைபெற்ருல் வரி விதிக்கப்படும் என்றும், காணிக்கை மீது வரி விதிக்கப்பட மாட்டாதென்றும் கூறினர்.

---

## செயற்கைக் கிரகம்

### ரஷ்யா அனுப்பியது

மாஸ்கோ, மார்ச் 22

“காஸ் மோஸ்—13” என்ற மற்றுமொரு செயற்கைக் கிரகத்தை ரஷ்யா நேற்று வான வெளிக்கு அனுப்பியது. ‘காஸ் மோஸ். -13’ செயற்கைக் கிரகத்தை வானவெளிக்கு அனுப்பிவைத்ததன் மூலம், இந்த வருடத்துக்கான வான வெளி ஆராய்ச்சியை ரஷ்யா ஆரம்பித்துள்ளது.

ரஷ்யா நேற்று அனுப்பிய செயற்கைக் கிரகத்தில், ஒரு வானெலி டிரான்ஸ்மீட்டர் இணைக்கப் பட்டிருக்கிறதென்றும், பல தகவல்களை இது வெளியிடலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### சனி 23-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வி. கே. குமாரசாமி — வயலின்.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 கே. கே. நடராஜன் — பேச்சு, 9-30 கே. கே. அந்தோனி — பாட்டு.

### ஞாயிறு 24-3-63

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கத்தோலிக்கநிகழ்ச்சி, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-00 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சே சிவப்பிள்ளை — பாட்டு, 5-45 திரை இசை, 6-10 குரல்வகை, 6-15 சோவில் அஞ்சல், 6-30 தாளவாத்தியக்கச்சேரி.

இரவு 7-00 மாதர் கேட்டவை, 7-30 ஏ. வேல்சாமி — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'காதலிக்கத் தெரியாது' — நாடகம், 9-45 நிலைய ஒலிப்பதிவுகள், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

### சனி 23-3-63

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 வி. சுந்தரேசன் — வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரலிசை, 2-10 வி. சுந்தரேசன் — வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்தியஇசை, 6-30 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'விபத்தின் விளைவு' — நாடகம், 8-40 தேசபக்திப்பாடல்கள், 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

### ஞாயிறு 24-3-63

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 டி. வி. சிவலிங்கம் — பாட்டு, 8-15 எம். டி. ராமநாதன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 பாலம் ராமமூர்த்தி — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டு முரசே — சித்திரம், 7-45 டி. சுப்ரமணியதேசிகர் — பாட்டு, -45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

## தொண்டர்படை அமைக்கும் முயற்சி

சாவகச்சேரி, வெள்ளி

தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி தீர்மானத்திற்கு அமைவாக நேரடிநடவடிக்கைகளுக்கான தொண்டர்படை தயாரிக்கும் முயற்சி சாவகச்சேரிப் பகுதியில் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இந்தப் போராட்டத்தின் போது பொதுஜன ஒத்துழைப்பை தாராளமாகப் பெறுவதற்கு ஏற்றவகையில் கட்சி கட்டுக்கோப்பை விஸ்தரித்துப் பலப்படுத்தும் நடவடிக்கைகளும் கையாளப்படவிருக்கின்றன.

அநேகமாக அடுத்தவாரம் ஏற்கனவே கிளைகள் இல்லாத கிராமங்கள்தோறும் புதிய கிளைகள் நிறுவப்படுமென்றும், ஒவ்வொரு கிராமச்சங்கப்பகுதிக்கும் ஒவ்வொருகிளை இருக்கத்தக்கதாக ஏற்பாடு செய்யப்படுகின்றன என்றும் தெரிகிறது.

## இதுவரை 133 கைமோசக் கொலைகள்

கொழும்பு, வியாழன்

இரண்டு கைமோசக் கொலைகள் நடைபெற்றிருப்பதாக நேற்று பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனுடன் இந்த வருடத்தில் மொத்தம் 133 (79 நாட்களில்) கைமோசக் கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. மார்ச் மாதம் (நேற்றுவரை) தில் இதுவரை 32 கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன.

## விடுமுறைகள் குறையும்?

கொழும்பு, வெள்ளி

அரசாங்க விடுமுறைகளை பன்னிரண்டிலிருந்து எட்டாகக் குறைப்பதற்கு தொழில் அமைச்சு உத்தேசித்துள்ளது.

அரசாங்க சேவையில் கருமமாற்றுபவர்களுக்கும் தனிபட்ட ஸ்தாபனங்களில் கருமமாற்றுபவர்களுக்கும் இந்தவிடுமுறைகள் பொதுவானதாக இருக்க வேண்டுமென அமைச்சு மேலும் கருத்து வெளியிட்டுள்ளது.

வெசாக், மேதினம், சுதந்திர தினம், சிங்கள, தமிழ் புதுவருடம், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினம், நத்தார், முகமது நபி ஜயந்தி, தைப்பொங்கல் ஆகிய விசேஷ தினங்களையே விடுதலை தினமாக்க வேண்டுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

## றே-மாஸ் சன சமூக நிலைய நிர்வாகிகள்

வவனியா, வியாழன்

வவனியா றே-மாஸ் சன சமூக நிலைய 4-வது ஆண்டுப் பொதுக்கூட்டம் பட்டின சபை அங்கத்தவர் திரு. எம். தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

புதிய உத்யோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: எம். தருமலிங்கம், காரியதரிசி: எம். கணபதிப்பிள்ளை, தனாதிகாரி: எச். விஜயரத்தின, உப-தலைவர்: ஆர். ஹரிச்சந்திரா, உப-காரியதரிசி: ஆர் குலசிங்கம், கணக்குப் பரிசோதகர்: எஸ். கந்தவனம்.




பார்லிமெண்ட்

# ‘எம்மை ஏமாற்றிவிட்டீர்’ பீலிக்ஸ்மீது கந்தையா புகார்

கொழும்பு, வெள்ளி

முன்னைநாள் நிதிமந்திரி திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமிழர்களின் விஷயத்தில் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டதாகவும் தம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டதாகவும் தமிழரசுக்கட்சி எம். பி. திரு. வி. ஏ. கந்தையா ஜனப்பிரதிநிதிகள்சபையில்கூறினர்.

நிதிமசோதா மீதான விவாதத்தில் இலாகா அற்ற மந்திரி திரு. பீலிக்ஸுக்கும் திரு. கந்தையாவுக்குமிடையே நிகழ்ந்த வாக்குவாதத்தின் போதே திரு. கந்தையா மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கந்தையா மேலும் தெரிவித்ததாவது:-

“நிதிசம்பந்தப்பட்ட விஷயங்களில் முன்னைநாள் நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ பண்டாரநாயகா நேர்மையுடன் நடந்து கொண்டார். ஆனல் குறிப்பாக தமிழர்களின் விஷயங்களில் நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டார்”

திரு. பீலிஸுக்கும் திரு. கந்தையாவுக்குமிடையே நேருக்கு நேர் வாக்குவாதம் நடைபெற்றபோது ‘நீர் எம்மை ஏமாற்றி விட்டீர்’ என திரு. கந்தையா கூறினர்.

அரசாங்கத்தின் கொள்கை பற்றி எந்த மந்திரிக்குத் தெரியுமெனத் தாம் கேட்கவிரும்புவதாகவும் எல்லோரும் திறமையற்றவர்களென்றும் திரு. கந்தையா மேலும் கூறினர்.

**அரசாங்கம் அவமதித்துள்ளது**

தமிழரசுக் கட்சி எம்.பி. திரு. இராசமாணிக்கம் பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மிக்க கொடுமையாக இருக்கிறது. எம்மைப் புறக்கணித்ததோடு அவமானப்படுத்தவும் செய்துள்ளது. பார்லிமெண்ட் மூலமாக அரசாங்கத்தின் கொள்கையை மாற்றிக்கொள்ளச் செய்வது முடியாததாக இருக்கிறது. ஏனெனில் எப்பொழுதும் வகுப்புவாத மெஜாரிட்டி அதற்கு இருந்துவருகிறது.

இதனுல்தான் நாம் பார்லிமெண்டுக்கு வெளியே, எமது குறிக்கோளை அடைய மக்களின் ஒத்துழைப்புடன் முயற்சி எடுக்க உததேசிக்கின்ருேம்.

## மூன்று எம். பி.க்கள் வெளிநடப்பு

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்டரி கல்வி ஆலோசகசபை நேற்றுக் கூடிய பொழுது மூன்று எம். பி.க்கள் வெளிநடப்புச் செய்தனர்.

பெந்தாரை-எல்பிட்டியா தொகுதி எம். பி. திரு. ஏ. காரியவாசம், வலப்பனை எம். பி. திரு. டி. பி. எம். ஹேரத், அச்மீனை எம். பி. திரு. எஸ். சமரசேகரா ஆகியோரே வெளிநடப்பு செய்த எம். பி.க்களாகும்.

இது சம்பந்தமாக திரு. காரியவாசம் தெரிவிக்கையில் கல்வி மந்திரியின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே தாங்கள் வெளிநடப்பு செய்தனர் என்று கூறினர்.

## ஜூன் மாதத்தில் சதிவழக்கு விசாரணை

கொழும்பு, வெள்ளி

வரும் ஜூன் மாதம் 3-ம் திகதி சதிவழக்கு விசாரணை ஆரம்பிக்கவிருக்கிறது.

இன்று மூன்று நீதியரசர்களும் சிரேஷ்ட வழக்கறிஞரும் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டிலேயே மேற்குறித்த திகதி பற்றி தீர்ப்பளிக்கப்பட்டது.

24 சதி சந்தேக நபர்களை காவலில் வைத்திருககும் பிஸ்காலின் சம்மதத்துடனேயே விசாரணை நடைபெறவேண்டிய நேரம் கணிக்கப்படும்.

## அணு ஆயுத சோதனை

### பிரான்ஸ் நடத்தும்

பாரிஸ, மார்ச் 23

பிரான்ஸசகாராவில் அல்லது பிற இடங்களிலாவது அணு ஆயுத சோதனையை நடதத முடிவுசெய்துள்ளதாக அறிவிககப்பட்டுளளது.

## றே-மாஸ் ‘பி’ பிரிவினர் வெற்றி

வவனியா, வியாழன்

றே-மாஸ் சன சமூக நிலைய “பி” பிரிவு கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் வவனியா அரசினர் சிங்கள மகாவித்தியாலய கைப்பந்தாட்டக் கோஷ்டியினருக்குமிடையில் சிநேக பூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியில் றே-மாஸ் கோஷ்டியினர் வெற்றி பெற்றனர்.

## எஃகு உற்பத்தி அதிகரிப்பு

புதுடில்லி, மார்ச் 22

பாரதத்தின் எஃகு உற்பத்தி இப்பொழுது அதிகரித்திருக்கிறதென்றும் பிலாய் எஃகு ஆலை உற்பத்திக்குறியை அடைந்துவிட்டதென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். நாட்டுக்கு 46 லட்சம் மெட்ரிக் தொன் எஃகு தேவைப்பட்டதென்றும் 40 லட்சம் மெட்ரிக் தொன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டதென்றும் ஆறுமெட்ரிக் தொன்எஃகு இறக்குமதி செய்யப்பட்டதென்றும் அவர் கூறினர்.

நாட்டிலுள்ள மூன்று எஃகு ஆலைகளில் பிலாய் எஃகு ஆலை உற்பத்திக்குறியை அடைந்துவிட்டதென்றும் றூர்கிலாய் ஆலைஉற்பத்தித்துறையில் முன்னேறுகிறதென்றும் துர்ஹாபூர் எஃகு ஆலையின் உற்பத்தியிலும் முன்னேற்றம் கண்டிருக்கிறதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## “எமது அடிப்படைப் பிரச்சனை பசிதான்”

உருத்திரபுரம், வெள்ளி

மனிதனின் அடிப்படைப்பிரச்சனையான பசியை நீக்க நாம் இயன்றளவு நடவடிக்கை எடுப்பின் அது இறைவனுக்குச் செய்யும் தொண்டாகமுடியும். பசியில் துடிப்பவர்களிடம் இலக்கியப்பற்ருே, சமயப்பிடிப்போ, சமுதாயநோக்கமோ எழவில்லை என்று திரு. ஈழத்துச் சிவானந்தன் உருத்திரபுரம் காந்தி சேவா நிலையத்தில் நடைபெற்ற பட்டினி ஒழிப்பு வாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

கூட்டத்திற்கு திரு. சி. க. வேலாயுதபிள்ளை தலைமை வகித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

பட்டினி ஒழிப்பு வாரத்தில் மட்டும் பசியைப் பற்றிச்சிந்தித்து விட்டு நின்றுவிடக் கூடாது. நமக்குப் பசிஎடுக்கும் போதெல்லாம் நாம் எண்ணும் போதெல்லாம், மற்றையோர் பசியையும் எண்ணி அவற்றிற்கு முடிந்த அளவு பரிகாரம் தேடிக்கொள்ள முனைய வேண்டும். மனிதனின் அடிப்படைப்பிரச்சனையான பசியை நீக்க நாம் இயன்றளவு முயற்சியெடுத்தால் அது ஒரு தெய்வத் தொண்டாகும்.”

திரு. மு. சிவலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

பசியில் இரண்டு வகையுண்டு ஒன்று வயிற்றுப்பசி மற்றென்று உள்ளப்பசி. வயிற்றுப்பசி தீர்ந்துவிட்டால் வாழ்வின் தேவையேதீர்ந்து விட்டதென்று எண்ணமுடியாது. வயிற்றுப்பசியைப் பற்றிச் சிந்திக்கின்ற மனிதஇனம் அதோடு இன்றியமையாத ஆன்மப் பசியைப்பற்றியும் எண்ணி வாழ வேண்டும்.”

## அபராதம்

கொழும்பு, வெள்ளி

இந்திய குதிரைப்பந்தைய செய்தியை அச்சடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கில் மருதானையைச் சேர்ந்த மௌலானு, சகாப்தீன், விஜயதிலக, பெரேரா, நாகூர், போலிஸ்சிங்கோ ஆகியோருக்கு கொழும்பு மாஜிஸ்டிரேட் திரு. எம். சிறிமானே தலா 200 ரூபா அபராதம் கட்ட வேண்டுமென்று தீர்ப்பளித்தார். அபராதம் செலுத்தத்தவறினுல் இரு மாதம் கடூழியச் சிறைத் தண்டனையனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கும்போது கூறினர்.

## ராட்சத தபால் பெட்டி!

லண்டன், மார்ச் 22

மிக உயரமான 300 அடிக்கும் அதிகமான ஒரு தபால் பெட்டி இங்குள்ள ஹில்லன் ஹோட்டலில் கட்டப்பட்டுள்ளது. இந்த ஹோட்டல் அடுத்த மாதம் திறக்கப்பட்டதும் இந்த ராட்சத தபால் பெட்டியில் தபால்களைப் போடலாம்.

மேற்படி ஹோட்டலில் 28 மாடிகளில் எந்த மாடியிலிருந்தும் இப் பெட்டிக்குள் தபால்களைப் போடலாம்.

## மகாநாடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

இன்று நாவலப்பிட்டியில் நடைபெறவிருந்த அகில இலங்கை சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தின் முதலாவது சைவ மகாநாடு அடுத்த மாதம் 6-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கட்

## சென்ஜோன்ஸ் 138 ரன்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம்மத்திய கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ கல்லூரிக்குமிடையில் சென்ஜோன்ஸ விளையாட்டு மைதானத்தில் நேற்று ஆரம்பித்த 65-வது வருடாந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் முதலாவதாகத் துடுப்பெடுத்து ஆடிய சென்ஜோன்ஸ கல்லூரிக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 138 ரன்கள் பெற்றது. மத்திய கல்லூரியின் சார்பில் பந்தெறிந்த வீரர்களுள் ஆர். சச்சிதானந்தம் 27 ரன்களுக்கு 3 விக்கட்டும் வி. அம்பலவாணர் 16 ரன்களுககு 2 விககட்டும் பெற்றனர்.

சென்ஜோன்ஸ கல்லூரியில் துடுப்பெடுத்தாடிய வீரர்களுள் தெய்வேந்திரா ஆககூடுதலான 48 ரன்களைப் பெற்ருர்.

மத்திய கல்லூரி வீரர்கள் முதல் இனிங்ஸில் துடுப்படித்து 28 ரன்களுடன் ஒரு விககட் நஷ்டமடைந்ததும் விளையாட்டு நிறுத்தப்பட்டது. இன்றுகாலை தொடர்ந்து விளையாட்டு நடைபெறும்.

## சனசமூக நிலைய விழா

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் கலைவிழா நாளை சனிக்கிழமை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரித் திறந்த வெளியரங்கில் நடைபெற விருக்கிறது. இதனைமுன்னிட்டு மூளாய்ப் பிள்ளையார் முன்றலிருந்து சித்தங்கேணிக்கூடாக பண்டத்தரிப்புச் சந்தியை நோக்கி சைக்கிளோட்டப் போட்டி நடைபெற இருக்கிறது. இப்போட்டியில் 100 பேருக்கு அதிகமானவர்கள் பங்கு கொள்ள இருக்கின்ருர்கள். சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களைத் திருமதி. வித்தாச்சி வழங்குவவார்.

## ‘காலம்சென்ற பிரதமரின் கொள்கைக்கு மாருனது’

செங்கடலை, வெள்ளி

‘ஆயுர்வேத வைத்தியர்களுக்குத் தொழில் வரி விதிப்பது, காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைக்கே மாருனது’ என்று ஸ்ரீபுஷ்பானந்தசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கண்டி ஆயுர்வேத சங்கத் தலைவர் திரு. ஜயசிங்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஆயுர்வேத வைத்தியர்களுக்கு, தொழில் வரி விதித்தால், வரும்படி குறைந்த ஆயுர்வேத வைத்தியர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள்என்றும், பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் இப்புதிய நடவடிக்கை, காலஞ்சென்ற அவரது கணவர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைக்கு மாருனதுஎன்றும்கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: “தொழில் வரி சம்பந்தமாக இச்சங்கம் நிதிமந்திரிக்கு எட்டுக் கடிதங்கள் அனுப்பியது. இக்கடிதங்களுக்கு நிதி மந்திரி பதிலளித்திருந்தார். ஆயுர்வேத வைத்தியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தொழில் வரி வாபஸ் பெறப்படமாட்டாது என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.”


### திருமண அழைப்பு

அன்புடையீர்,

| மணமகன் : | மணமகள் : |
|---|---|
| திருநிறை செல்வன் கந்தையா துரைசிங்கம் (லிகிதர் பொலிஸ் இலாகா) | திருநிறை செல்வி கந்தையா சிவபாக்கியம் |
| ஆவரங்கால், புத்தூர். | அல்வாய் தெற்கு, அல்வாய். |

காலம்:
23-3-63 சனிக்கிழமை மாலை 4-30 மணி

இடம்:
ஆவரங்கால் சிவன்கோவில்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
திருமதி சி. கந்தையா, பொ. இளையதம்பி, ஆ. கா. பஞ்சாட்சரம்.

மகத்தான 2-வது வாரம்!
வீர காவியம்!!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) தீவொளி (நுவரேலியா) ஜெமினி (ருகலை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்

சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்
சாவித்திரி குமாரி ருக்மணி
வி. நாகையா
முத்துலட்சுமி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பைய
ஏ. கருணாநிதி
டி. கே. ஷண்முகம்



மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
தாய்சொல்லைத் தட்டாதே


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.